Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 20 ஆம் நாள் ரபி ஆகிர் 25 (6-10-61) வெள்ளிக்கிழமை இதழ் 201

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானால்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14,டாம் வீதி, கொழும்பு.

விடுதலை பெற்றுத் திரும்பிய தலைவர்களுக்கு

# ஆனந்தகண்ணீர்மல்க

## 'பார்லிமெண்ட் கூட்டத்தில் கலந்துகொள்வோம்'

### டாக்டர் நாகநாதன் தகவல்



யாழ்ப்பாணம், வியாழன்

"பார்லிமெண்ட் கூட்டத்துக்கு நாங்கள் செல்வோம்" என்று தமிழரசுக் கட்சித்தலைவர்களில் ஒருவரான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தெரிவித்தார்.

இம்மாதம் 19 ந் திகதி பார்லிமெண்ட் கூடும்பொழுது நீங்களும் தமிழரசுக் கட்சியின் இதர எம். பிக்களும் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வீர்களா என்று கேட்டபொழுதே டாக்டர் நாகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தயவுசெய்து அரசியல் பற்றி எதையும் கேட்காதீர்கள். நான் எதுவும் சொல்ல மாட்டேன்" என்று டாக்டர் நாகநாதன் ஆரம்பத்திலேயே கூறிவிட்டார்,

### மூதூர் உபதேர்தல்

மூதூர் தொகுதி உபதேர்தலுக்கு தமிழரசுக் கட்சியின் சார்பில் அபேட்சகர் எவரையும் நிறுத்துவதற்கு முடிவு செய்திருக்கிறீர்களா? என்ற கேள்விக்கு டாக்டர் நாகநாதன் பதிலளிக்கையில், "நாங்கள் எதைப்பற்றியும் இன்னும் முடிவுசெய்யவில்லை. இனி நிலைமையைப் பார்த்து தீர்மானிப்போம்" என்று கூறினர்.

செனட்டர் தெரிவுக்கு தாங்கள் ஒரு அபேட்சகரை நிறுத்தப்போவதாகவும் ஆனல் யார் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்றும் டாக்டர் தெரிவித்தார்.

நாளை வெள்ளிக்கிழமை தாம் கொழும்புக்குத் திரும்பிச் செல்வதாகவும் டாக்டர் நாகநாதன் கூறினர்.

## ராதாகிருஷ்ணன் வெளிநாடு பயணம்

புதுடில்லி, அக். 5

இந்திய உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இம்மாதம் 14-ம் திகதி வெளிநாட்டுப் பிரயாணத்தை ஆரம்பிக்கிருர். ஹங்கேரி, நெதர்லண்ட்ஸ், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்வார்.

---

## போலாரிஸ் ஏவுகணை

கேப்கனவரால், அக். 5

கேப்கனவராலுக்குச் சமீபத்தில் ஒரு கப்பலிலிருந்து போலாரிஸ் ஏவுகணை யொன்றை அமெரிக்கா வெற்றிகரமாக அனுப்பி பரீட்சை செய்திருக்கிறது.

## உருக்கமான வரவேற்பு

## ஆண், பெண் குழந்தைகள் ரயில் நிலையத்தில் திரண்டனர்

### கணவனை மனைவியும்; மகளைத் தாயும் கண்டு மகிழ்ந்த காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

ஆண், பெண், சிறுவர், சிறுமியர் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தின் உள்ளேயும் வெளியேயும் திரண்டு நின்று, சுமார் ஆறுமாத காலம் தடுப்புக் காவலில் இருந்து விடுதலையடைந்து இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தமிழரசுக் கட்சித் தலைவர்களை உற்சாகமாக வரவேற்றனர்.

நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா, கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் ஆகியோர்களே இன்று "யாழ்தேவி'யில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வந்திறங்கியவர்கள்.

### மேயர் மாலைசூட்டி வரவேற்றார்

யாழ்ப்பாண நகரமேயர் திரு. டி. எஸ். துரைராஜாவும் உதவி மேயர் திரு. நா. த. செல்லத்துரையும் தலைவர்கள் ரயில்பெட்டியிலிருந்து இறங்கியதும் மலர்மாலைகள் சூட்டி வரவேற்றனர். ரயிலிலிருந்து இறங்குவதற்கு விடாமலே அங்கு திரண்டுநின்ற மக்கள் அவர்களை தோளில் சுமந்து பிளாட்பாரத்தில் போடப்பட்டிருந்த 'மேடை' போன்ற பெரியமேசைக்குக் கொண்டுவந்தனர்.

தலைவர்களை வரவேற்பதற்காக உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், செனட்டர் நல்லையா, புரக்டர் நடராசா, முன்னாள் நீதிபதி திரு. க. ஜெயக்கொடி ஆகியோரும் அங்கு காத்து நின்றனர். திரு. சிவசிதம்பரம் இன்று காலை ரயிலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருந்தார்.

### கண்ணீர் வழிந்தோட நின்ற தாயார்

ஆறுமாத காலம் தடுப்புக்காவலில் தமது கணவனின் அருகில் இருந்தபின் விடுதலையடைந்து கணவனுடன் வந்து சேர்ந்த தமது மகள் திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தை அவரது தாயார் கண்ணீர் வழிந்தோட ரயில்நிலையத்தில் மக்கள்கூட்டத்தில் நெரிபட்டு நின்று மகளைப் பார்த்து மகிழ்ந்தார். தமது சகோதரியைப் பார்ப்பதற்காக திருமதி. அமிர்தலிங்கத்தின் தங்கையும் ரயில்நிலையத்துக்கு வந்திருந்தார்.

### கண்ணீர் உகுத்தனர்

டாக்டர் இ. எம். வி. நாகநாதன் மேசையில் ஏறி "அன்பார்ந்த மக்களே" என்று கூற ஆரம்பித்ததும் உணர்ச்சிவசப்பட்டு நாத்தடுமாறியதுடன் கண்களும் கலங்கிவிட்டன. அங்கு நின்ற மக்கள் கண்களிலும் நீர்வழியத் தொடங்கின. ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையாவும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கமும் அங்கு சில வார்த்தைகள் கூறியபின் பொது மக்களை அமைதியாகக் கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டனர்.

[ 4-ம் பக்கம் பார்க்க ]

## லண்டன் ரயில் நிலையத்தில் எஸ். ஜே. வி. க்கு வரவேற்பு



லண்டன் (கடிதம்)

எடின்பரோவிலிருந்து லண்டன் வந்து சேர்ந்த தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தையும் திருமதி செல்வநாயகத்தையும் இங்கு ரொஸ்ரயில் நிலையத்தில் இலங்கை தமிழ் மாணவர்களும் லண்டனிலுள்ள தமிழர்களும் ஆண்களும் பெண்களுமாகத் திரண்டுநின்று உற்சாகமாக வரவேற்றனர்.

எடின்பரோ மேற்கு ஜெனரல் ஆஸ்பத்திரியில் பூரண வெற்றிகரமாக சத்திரசிகிச்சை நிறைவேறிய பின் படிப்படியாக குணமடைந்துவரும் திரு. செல்வநாயகம் பூரணகுணமடைந்த பின்னரே இலங்கைக்குப் பிரயாணமாவார். சென்ற மாதம் 18-ந் திகதி திரு. செல்வநாயகமும் திருமதி செல்வநாயகமும் எடின்பரோ--லண்டன் எக்ஸ்பிரஸ் ரயில்நிலையத்துக்கு வந்து சேர்ந்தனர்.

திரு. எஸ். ஜே. வி. ஒக்டோபர் 6-ந் திகதி கப்பலில் இலங்கைக்குப் பிரயாணமாவாரென எதிர்பார்க்கப் படுகிறது.

# இமயசோதி சிவானந்த சரஸ்வதி மஹராஜ் சுவாமிகள் பேரில்

## அன்புப் பாமாலை

### எழுசீர் விருத்தம்

சச்சிதானந்தமாய் சகலவித யோகமாய்
சன்மார்க்க சங்க மயமாய்
எச்சமயம் எவ்வுலகம் எப்பொருள்கள்
எம்மொழிகள் எல்லாமாய் நிற்கும் சோதி
சச்சிதா னந்தர்குரு ஜகத்குரு சிவானந்தர்
சார்திவ்ய ஜீவன சங்கம்
இச்சையறுத் திவ்வுலகை இரட்சிக்கும்
வகைபாடி இறைவனை இறைஞ்சு வோமே.

### அறுசீர் விருத்தம்

சேவையே சிறந்த யோகம் சீலமும் புகழும் ஆகும்
பாவையே அனையார் மாந்தர் பரமனுர் அருளே யாவும்
சேவையிற் தேர்ந்த திவ்ய ஜீவன சங்கம் சேர்த்து
யாவையும் யாண்டும் செய்யும் இமாலய முனியே வாழ்க!

மன்னவன் இமய வள்ளல் வடதிசை இருந்த தாலே
தென்னகம் தளர்ந்த தென்று குறுமுனி தனையேசேர்த்தான்
தென்னக யோகி ஈழச் சேவைசெய் சச்சிதா னந்தர்
தன்னையே ரிஷிகே சத்து முனிசிவா னந்தர் தந்தார்!

"அன்பொடு தியானம் சேவை அனுபூதி ஆன்ம சுத்தம்
இன்பமாய் இனிக்கும் பிரம்மச்சரியம் சத்தியம் அஹிம்சை
என்பன எல்லாம் பேணி எழுபிறப் பறுத்து மோட்சம்
என்பி(ல்)ளாய்! பெறுக!!" என்னும் ரிஷிகேச வள்ளல்
போற்றி!!!

கெற்பெலியூர் கவிஞர்
நாவலர்தாசன்

# வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வெள்ளி 6-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 7-45 சாந்தவதி தெய்வநாயகம் - பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 எஸ். கே. இராமமூர்த்தி – நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 ஞானஅஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 வி. சுந்தரம் – பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 கே. ஆர். ராமய்யா - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 குரல்இசை, 1-50 வயலின், 2-10 டி. பி. ராமகிருஷ்ணன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-15 காந்தி கதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 டி. பிருந்தா, டி. முக்தா - பாட்டு, 9-15 பலகணி, 9-30 புதுமலர் - மெல்லிசை நிகழ்ச்சி, 9-45 இசை மாலை.

# சித்தாந்த பிரவேச, பால பண்டிதர் பரீட்சைப் பெறுபேறுகள்

கொழும்பு விவேகானந்த சபையால் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் நடாத்தப் பெற்ற மேற்படி பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர்.

**சித்தாந்த பிரவேச பண்டிதர்**

சி. கணபதிப்பிள்ளை, கந்தசாமி கோயிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். செ. கந்தையா, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. த. சுவாமிநாதன். நுணுவில் கல்வயல் றோட், கல்வயல், சாவகச்சேரி. சி. செல்லத்துரை, நீர்வேலி தெற்கு, நீர்வேலி. க.முத்துவேலு, கரணவாய் வடக்கு, கரவெட்டி.

**சித்தாந்த பால பண்டிதர்**

ஒருவரும் சித்தியடையவில்லை.

# வர்த்தகர்களை நஷ்டமடையச் செய்வது அரசினர் நோக்கமல்ல

கம்பளை, வியாழன்

"இதுவரை சிலவெளிநாட்டு முதலாளிகளே கருவாடு இறக்குமதி செய்யும் ஏகபோக உரிமையை அனுபவித்து வந்தனர். இவாகள் அனுபவித்து வந்த இந்த தனி ஆதிக்கத்தை நீக்கவே கருவாடு இறக்குமதி செய்யும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றிருக்கின்றதே தவிர சிறுவர்த்தகர்களை நஷ்டப்படுத்த அல்ல'.

இவ்வாறு உடுனுவர எம். பி. திரு. டி. பி. ஜெயசுந்தரா பம்பரொறவுதனியாவில் கூட்டுமொத்தவிற்பனவு ஸ்தாபனத்தின் கிளையைத் திறந்துவைத்த பின்னர் நடைபெற்ற கூட்டத்திற் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

முன்னர் இறக்குமதி செய்து வந்த முதலாளிவர்க்கத்தினர் பாவனையாளர்களையும், சிறுவர்த்தகர்களையும் கொள்ளைலாபமடித்து வந்தார்கள் அரசாங்கம் சிறுவர்த்தகர்களுக்கு கருவாடும் அத்தியாவசியமான பொருள்களும் கட்டுப்பாட்டு விலைக்கு 'கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்களின் மூலமாக விநியோகம்செய்யும். இதனுல் பாவனையாளர் கட்டுப்பாட்டுவிலைக்கு பொருள்களை வாங்க சாத்தியமாகும்.

வர்த்தகர் பாவனையாளர்களுக்கு கட்டுப்பாட்டு விலைப்படி பொருள்களை விநியோகம் செய்வதால்தான் வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியும்.

# ஆசிரியை இடமாற்றம்

காத்தான்குடி, புதன்

கிரான் அரசினர் பாடசாலையில் சங்கீத ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி எஸ். ஜீ. கனகசபை காத்தான்குடி 3-ம் குறிச்சி அரசினர் முஸ்லிம் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# குழந்தைகளை தூக்கிவிட்ட நேரு



மதுரை மீனுக்ஷியம்மன் கோவிலுக்கு பிரதமர் நேரு விஜயம்செய்தபோது கோவில் திருவிழாப்போலக் காட்சியளித்தது.

கோவிலின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அடங்கலாக பல்லாயிரக்கணக்கான பேர் குழுமியிருந்தனர். "நேருஜி வாழ்க" என்று அவர்கள் கோஷித்தனர்.

ஆயிரங்கால் மண்டபத்தில் அழகிய சில சிற்ப வடிவங்களை நேரு பார்வையிட்டார்.

இந்த மண்டபத்தில் 999 கால்களே உள்ளன. ஆயிரங்கால்களும் இருக்குமானுல், இங்கிருந்து சொர்க்கத்துக்குப் போகமுடியும் என்பது ஒரு ஐதீகம் என்று ஸ்ரீ காமராஜ் நேருவிடம் கூறினுர்.

ஸ்ரீ மீனுக்ஷியை ஸ்ரீ சிவனுக்கு ஸ்ரீ விஷ்ணு தாரைவார்த்துக் கொடுப்பதை சித்தரிக்கும்சிற்ப வடிவத்தை நேரு பார்த்தார். இக்கோயிலில் உள்ள மிக அழகிய சிற்ப வடிவங்களில் இது ஒன்ருகும். கோவிலில் எல்லா சந்நிதிகளுக்கும் நேரு சென்ற போது சாம்பிராணி வாசனை போடப்பட்டிருந்தது.

நேரு கோவிலைவிட்டுப் புறப்பட்டபோது, அவரது பாதத்தைத் தொட்டு கும்பிடுவதற்காக அவரிடம் கூட்டத்திற்கு நெருக்கியடித்துக்கொண்டு வந்தார்கள். அப்போது கீழே விழுந்த சில குழந்தைகளைத் தூக்கி விடுவதற்கு நேரு உதவி செய்தார்.

# சாட்சியம் சரியில்லை வழக்குத் தள்ளுபடி

யாழ்ப்பாணம், வியாழன்

காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த சப் - இன்ஸ்பெக்டர் கே. குமாரு என்பவரையும் விக்கிரம சுந்தரா என்னும் பொலிஸ்கான்ஸ்டபிளையும் தாக்கி காயம் விளைவித்ததாக சுவாமிநாதர் தியாகராசா, சின்னத்தம்பி கருணகடாட்ஷ குருசுவாமிநாதர் அழகரத்தினம், இளையதம்பி தேசிங்க ராஜா, சிவகுரு சேனதிராஜா, வைரமுத்து வடிவேலு ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி என். கிருஷ்ணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. டி. முத்துசாமிபிள்ளை வழக்கைத் தொடர்ந்திருந்தார். இரண்டு நாள் விசாரணையின் பின்னர் எதிரிகளை விடுதலை செய்த நீதிபதி வழக்கைத் தொடர்ந்தவர் அளித்த சாட்சியைத் தாம் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவித்தார்.

திரு. எம். சிவசிதம்பரம் திரு. எஸ். நடராஜாவின் அனுசரணையுடன் 1-ம், 2-ம், 3-ம் எதிரிகள்சார்பில் ஆஜரானுர். திரு. வி. எம். தர்மலிங்கம், திருவாளர்கள்: எஸ். நடராஜா, வி. செல்லத்துரை ஆகியோர் அனுசரணையுடன் 4-ம், 5-ம, 6-ம் எதிரிகள் சார்பில் ஆஜரானுர்கள்.

# தேசிய சேவைத் திட்டம்

### கமிட்டியின் கருத்து

கொழும்பு, வியாழன்

தேசியசேவைத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் அத்திட்டத்தை நல்ல முறையில் செயற்படுத்துவதற்காக பிரதம மந்திரி இந்த இயக்கத்துக்கு தலைமை தாங்கி இயக்கத்தின் செல்வாக்கை உயர்த்த வேண்டும் என இத்திட்டம் பற்றி ஆராய அரசாங்கத்தினுல் நியமிக்கப்பட்ட விசேஷ கமிட்டி கருத்து தெரிவித்துள்ளது.

இக்கமிட்டி மேலும் தெரிவித்துள்ளதாவது:

இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் வானொலி மூலமும், தகவல் இலாகா மூலமும் பத்திரிகைகள் மூலமும் தேசிய சேவை இயக்கத்தின் மாண்பு பற்றித் தெரிவிக்க வேண்டும். இத்திட்டத்துக்கு ஒவ்வொருவரும் உதவிபுரியுமாறு செய்ய வேண்டும்.

தேசிய சேவைச்சபை ஒன்று நிறுவப்படவேண்டும். வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கக்கூடிய உதவிபற்றி ஆராய பிரதமர் ஒரு சிறு கமிட்டியை ஏற்படுத்த வேண்டும்.

# யாழ்ப்பாண கத்தோலிக்க ஞானஸ்நான பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் சென்ற வெள்ளிக்கிழமை தொடர்ந்து நான்கு தினங்களாக நடைபெற்று வந்த ஞானஸ்நானப் பொருட்காட்சியை பல ஆயிரக்கணக்கான கத்தோலிக்க மாணவர்களும் முதியோர்களும் பார்த்து மகிழ்ந்தனர்.

இவ்வைபவத்தை வண. டி ஏ. எக்ஸ். தேவதாஸ், வண. பிரான்சிஸ், வண. அகுஸ்தீன் ஆகிய குரவர்மாரால் 'புனித கொஞ்சேஞ்சி மாதா கோவில் டிமொன் போட்" சாலையில் ஒழுங்கு செய்யப்பட்டது.

இதில் சிறந்த ஓவியர்களால் வரையப்பட்ட படங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

# மீன் விலையைக் குறைக்க ஏற்பாடு

கொழும்பு, வியாழன்

காணி விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. வி. பி. டி' ஸில்வா ஸ்தலஸ்தாபன அமைச்சின் உதவியுடன் தீவு பூராவும் உள்ள மார்க்கட்டுகளில் மீன் கடைகளைத் திறக்க ஒழுங்கு செய்துள்ளார்.

இத்திட்டம் மீன் பிடி அமைச்சின் ஆலோசனைக் கமிட்டியால் சிபார்சு செய்யப்பட்டது.

பாவனையாளர் தீவின் எல்லாப் பகுதிகளிலும் நியாயமான விலையில் மீன் வாங்குவதற்கு வழி செய்யவே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

# யானையைச் சுட அனுமதி

அநுராதபுரம், வியாழன்

மதவாச்சியைச் சேர்ந்த புலிலிய கரம்பிவாப்பகுதியில் திரியும் மதயானை ஒன்றைச் சுட்டுக்கொல்வதற்கு இருவருக்கு பேர்மிட்டுகள் வழங்கபட்டுள்ளன.

இந்த யானை காட்டுப்பாதை வழியாகச் சென்ற ஒரு மனிதரை சமீபத்தில் கொன்றதாகத் தெரிகிறது.

# இலங்கைநாயகத்துக்கு அரசினர் கௌரவம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணக் கச்சேரி அலுவலக உதவியாளராகக்கடமையாற்றும் திரு. எஸ். இலங்கைநாயகம் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஓய்வு பெறுகிருர். இதனை முன்னிட்டு அவர் இன்றுடன் மூன்றுமாத கால லீவில் செல்கிருர். வருகிற ஜனவரி மாதத்துடன் அவருக்கு 60 வயதாகிறது.

இவர் லண்டன் பரீட்சையிற் சித்தி எய்தி ஆரம்பத்தில் ஆசிரியராக இரண்டு வருஷங்கள் பணிபுரிந்தார். இதன் பின் அரசாங்க சேவையில் சேர்ந்து தீவின் பல பாகங்களிலும்முக்கியமாகக் கொழும்பு, அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கடமையாற்றியிருக்கிருர். கொழும்பில் இருக்கும்போது சமூக சேவையிலும் சமயப் பணிகளிலும் அதிகமாக ஈடுபட்டார்.

கொழும்பு விவேகானந்த சபையின் கணக்குப் பரிசோதகராகப் பல ஆண்டுகள் பணியாற்றியிருக்கிருர். அனுராதபுரத்தில் கடமையாற்றும் போது கஷ்ட நிவாரண வேலைகள் போன்ற பல சேவைகளை அரிய முறையில் செய்து விவசாயிகளுக்கு நல்ல தொண்டு புரிந்தார். அனுராதபுரம் விவேகானந்த சபைத் தலைவராகவும் இருந்து நல்ல பணிகள் ஆற்றினுர்.

யாழ்ப்பாணக் கச்சேரி அலுவலக உதவியாளராகச் சென்ற பல ஆண்டுகளாக கடமை பார்த்திருக்கிருர்.

திரு. இலங்கைநாயகத்தின் சேவைகளைப் பாராட்டு முகமாக அவர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து அரசாங்கம் அன்னுருக்கு சமாதான நீதிபதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது. இவர் யாழ்ப்பாணத்து மயிலிட்டியைச் தமது தாயகமாகக் கொண்டவர்.

### தற்காலிக அலுவலக உதவியாளர்

யாழ்ப்பாணக் கச்சேரி தற்காலிக அலுவலக உதவியாளராக திரு. எஸ். ஏ. ஜோசப் நியமிக்கப்பட்டுள்ளார். அலுவலக உதவியாளர் திரு.எஸ். இலங்கைநாயகத்தின் ஓய்வு ரஜாவைத் தொடர்ந்து இவரது புதிய தற்காலிக நியமனம் இடம் பெற்றுள்ளது. திரு. ஜோசப் மேலதிக அலுவலக உதவியாளராகவிருந்தார்.

# கவிஞருக்குப் பாராட்டு

காத்தான்குடி, புதன்

'ஆனந்தவிகடன்' பாரதி நினைவுக் கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற கவிஞர் திமிலைத்துமிலனுக்கு ஓர் பாராட்டு விழாவை மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத்தினர் நடாத்தினர். விழாவுக்கு மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர் திரு. ரீ. பாக்கியநாயகம் தலைமை தாங்கினுர்.

"நம்மிடை இலைமறை காய்போல் எத்தனையோ கவிஞர்கள் இருக்கிருர்கள். திமிலைத்துமிலனைப் போன்றோரை நாம் மதித்து ஊக்கமளித்தால் பாரதி போன்ற தலை சிறந்த கவிகள் நம் மத்தியில் உருவாவது திண்ணம்" என்று தலைவர் கூறினுர். மாஸ்டர் சிவலிங்கம், ம. த. லோறன்ஸ் நவம் ஆகியோரும் மற்றும் பலரும் கவிஞர் திமிலைத்துமிலனைப் பாரட்டிப் பேசினர்.

பாராட்டுவிழாவுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய கவிஞர் தமிலைத்துமிலன் "ஒரு கவிஞன் மக்கள் உள்ளத்தில் வாழ வேண்டின் அது மக்களின் ஆதரவிலேயே தங்கியிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

# "ஹமர்ஷீல்ட் மரணம்பற்றி சர்வதேச விசாரணை அவசியம்"

## ஐ. நா. சபையில் மேனன் கோரிக்கை

### போர்ச்சுக்கலின் நடத்தைக்கு கண்டனம்

நியுயோர்க், அக். 5

"ஐ. நா.வின் பொதுக் காரியதரிசியாகப் பணியாற்றிய திரு. ஹமர்ஷீல்டின் மரணம் பற்றி சர்வ தேசக் குழுவொன்றை விசாரணை செய்ய ஐ.நா. நியமிக்கவேண்டும்" என்று இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ண மேனன் நேற்று ஐ. நா. பொதுச் சபையில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

"திரு. ஹமர்ஷீல்டுக்கு மரணம் நேர்ந்த விதம்பற்றி பாரதம் கவலை கொண்டுள்ளது. அவரது மரணம் பற்றி முறையான விசாரணை நடைபெறவேண்டும். ஐ. நா. வின் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இவ்வித மரணம் ஏற்படுவது குறித்து யாரும் கவலையும் சிரத்தையும் கொள்ளாமலிருந்தால் அதுவிபரீதமானதாகவே கருதப்படும்" என்று திரு. மேனன் கூறினர்.

உலக விவகாரம் சம்பந்தமான பொது விவாதத்தில் உரை நிகழ்த்திய திரு.மேனன் லாவோஸ் குழப்ப நிலைபற்றி தாம் இப்பொழுது எதுவும் பேசப்போவதில்லையென்றும் லாவோஸ் நிலைமையைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதே இதற்குக் காரணமென்றும் கூறினர்.

பெர்லின் நிலைமை பற்றி தனிப்பட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் அதைப் பற்றியும் தாம் குறிப்பிட விரும்பவில்லையென்றும் திரு. மேனன் தெரிவித்தார்.

அணு ஆயுதப் பரிசோதனைகளை ரஷ்யா மீண்டும் ஆரம்பித்ததைக் குறிப்பிட்ட திரு. மேனன், இப்பரீட்சைகளை ஆரம்பித்தது பாரதத்துக்கு தீவிர மனக் கிளர்ச்சியை உண்டுபண்ணியுள்ளதென்றார். இப்பரீட்சைகள் உலக அமைதியை நிலைநாட்ட எடுக்கப்பட்ட முயற்சிகளை மேலும் பின்னடையச் செய்துள்ளதென்று திரு. மேனன் கூறினர்.

காலனி ஆதிக்கம்பற்றி குறிப்பிடுகையில் உலகில் எல்லோருமே சுதந்திரம் பெற்று சுதந்திரமாக வாழவேண்டுமென்பதே பாரதத்தின் விருப்பம் என்று அவர் கூறினர். அங்கோலாவில் போர்ச்சுக்கீஸியர் மிருகத்தனமாக நடந்துகொள்கிறார்களென்றும் அங்கோலாவிலிருந்து மாதாமாதம் 10,000 மக்கள் அகதிகளாக வெளியேறுகிறார்களென்றும் திரு. மேனன் கூறினர்.

"அங்கோலா நிலைமை உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தை உண்டுபண்ணக்கூடியவை" என்று திரு. மேனன் கூறினர்.

காங்கோபற்றி குறிப்பிடுகையில் பாதுகாப்புச் சபையின் முடிவுகளை முற்றாக நிறைவேற்றவேண்டுமென்று திரு. மேனன் கூறினர்.

## பர்மாவில் பெருவெள்ளம்

### 80,000 ஏக்கர் வயல் நாசம்

ரங்கூன், அக். 5

பர்மாவில் பெரும்வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. எண்பதினாயிரம் ஏக்கருக்கும் அதிகமான நெல் வயல்கள் வெள்ளத்தினால் நாசமடைந்துள்ளதாகவும் கிராமங்கள், வீதிகள், வீடுகள் பல பெரும் சேதத்துக்குள்ளாகியிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. சென்ற 25 வருடங்களில் இது போன்ற மிக மோசமானவெள்ளப்பெருக்கு பர்மாவில் ஏற்பட்டதில்லையாம்.

வெள்ளத்தினால் கஷ்டமுறும் மக்களுக்கு உதவிக்காக ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான உணவுப்பொருள்களை இந்தியா அனுப்புகிறது.

## அலிகாரில் 185 பேர் கைது

புதுடில்லி, அக். 5

அலிகாரில் அமைதி நிலவுவதாக. அங்கிருந்து கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் சங்கத் தேர்தலைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட வகுப்புக் கலகம் காரணமாக 24 மணி நேரம் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. நேற்று முற்பகல் 11 மணியிலிருந்து இரண்டுமணிநேரத்திற்கு ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டிருந்தது.

இக்கலகம் சம்பந்தமாக இதுவரை 185 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திரு. டி.என். தத்தார், கல்வி மந்திரி திரு. ஸ்ரீமாலி, திரு. ஷா நவாஸ்கான் ஆகியோர் இன்று அலிகாருக்குப் பிரயாணமாகின்றனர்.

# 'உணவுப் பொருள்களின் விலைகளை குறைக்கவேண்டும்'

## கிராமசபை கோரிக்கை

### 'வயிற்றையும் சுருக்கவேண்டும்' என்கிறார் ஒரு அங்கத்தவர்

நாவலப்பிட்டி, வியாழன்

"இந்நாட்டு அரசாங்கம் முன்னேற்றத்திற்கான பல திட்டங்களை வகுத்திருக்கிறது. இதில் நாம் வெற்றியடைவதற்கு எவ்வித தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். நாட்டின் நன்மையைக் கருதி வயிற்றையும் சுருக்கவேண்டும்." பஸ்பாகை கிராமக் கமிட்டி அங்கத்தவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பிரமுகருமான திரு. ஏ. ரத்னயக்கா கிராமக் கமிட்டியின் மாதாந்தக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

பஸ்பாகை கிராமக்கமிட்டித் தலைவரும் லங்கா சமசமாஜக் கட்சி நாவலப்பிட்டிக் கிளையின் தலைவருமான திரு. எஸ். மாரசிங்கா இதற்கு பதிலளிக்கும் முகமாகப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்.

அரசாங்கத்தின் போக்கைப் பார்த்து வருந்த வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் திட்டத்தினால் பொது மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் சோஷலிஸம் என்ற வார்த்தைக்கே அர்த்தம் இல்லாத வகையில் ஆட்சியாளர் நடக்கின்றனர். நாட்டின் முன்னேற்றம் கருதி தோட்டங்கள், வங்கிகள், ஏற்றுமதி இறக்குமதி எல்லாம் தேசியமயமாக்கப்படவேண்டும்.

மாவு, சீனி முதலான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை குறைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றும் ஏகமனதாக நிறைவேறியது. சகல கட்சி அங்கத்தவர்களும் இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

பஸ்பாகை கோரளைக்கு மருத்துவமனை கட்டுதல், தெக்கிந்த, மாப்பக்கந்தை நாடுகளுக்கு நாவலப்பிட்டியிலிருந்து புதிய பஸ் சேவை, கடியன் சேனைக்கு புதிய மார்க்கட் கட்டுதல் முதலான தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## ஸ்டேஷன் மாஸ்டருக்கு பிரிவுபசாரம்

நாவலப்பிட்டி, வியாழன்

கடந்த நாற்பத்திரண்டு வருடங்களாக ரயில்வேயில் சேவை செய்தவரும், நாவலப்பிட்டி ரயில்வே ஸ்டேசன்மாஸ்டருமாகிய திரு கே. வைரவப்பிள்ளை தமது 59வது வயதில் ஓய்வு பெறுவதை முன்னிட்டு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

நாவலப்பிட்டி ரயில்வே ஊழியர் பொழுது போக்கு விடுதியில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு திரு. வை.ஏ.பி. பெரேரா தலைமை வகித்தார்.

ஸ்ரீ வைரவப்பிள்ளையின் பயபக்தி நிறைந்த சேவையையும் சமூகத் தொண்டினையும் பாராட்டி அவர் பேசினர். ரயில்வே ஊழியரின் சன்மானம் ஒன்றும் வழங்கப்பட்டது. திரு. கே. வைரவப்பிள்ளை தமக்களித்த பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

## குரோமிக்கோ கென்னடி சந்திப்பு

வாஷிங்டன், அக். 5

சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோ நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஜனதிபதி கென்னடியை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசுவார்.

சென்ற சில தினங்களாக அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு.டீன்றஸ்க்குடன் பேர்லின், ஜெர்மனிபற்றி பேச்சுவார்த்தை நடத்திவந்த திரு. குரோமிக்கோ நாளை ஜனதிபதிகென்னடியுடன் பேர்லின், ஜெர்மன் பிரச்னை சம்பந்தமாகப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. றஸ்க்குடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் நம்பிக்கையளித்துள்ளதைத் தொடர்ந்தே திரு. குரோமிக்கோ ஜனதிபதியைச் சந்திக்கிறார்.

# "உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகவே முடியும்"

## அரபு லீக் சபைக்கு ஐக்கிய அரபுக் குடியரசு எச்சரிக்கை

கெய்ரோ, அக். 5

சிரியா சம்பந்தமாக அரபு லீக் சபை கூடி ஆராய்ந்து எந்த முடிவு செய்தாலும் அது ஐக்கிய அரபுக் குடியரசின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகவே கருதப்படும் என்று ஐக்கிய அரபுக் குடியரசு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சிரியா நிலைமை பற்றி அரபு லீக்சபை உடனடியாகக் கூடி ஆராயவேண்டும் என்று டுனிஷியா கேட்டுள்ளது.

சிரியாவில் விமானநிலையங்கள் யாவும் மீண்டும் விமானப் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளதாக டமாஸ்கஸிலிருந்து கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது.

சிரியாவில் புரட்சி ஆரம்பமான சென்ற வியாழக்கிழமை பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்குச்சட்டம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இதே சமயம் எகிப்து மக்களுக்கு டமாஸ்கஸ் ரேடியோ தொடர்ந்து ஒரு வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கிறது. கேணல் நாஸரின் அடக்குமுறை ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திர வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுமாறு டமாஸ்கஸ் ரேடியோ வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வங்காள மொழி மசோதா

கல்கத்தா, அக். 5

மேற்கு வங்காளத்தில் வங்காள மொழியை அடுத்த இரண்டு வருடங்களுக்குள் ராஜாங்க மொழியாக்கும் மசோதா மேற்கு வங்காள சட்டசபையின் இரு சபைகளிலும் நிறைவேறியது.

டார்ஜீலிங் ஜில்லாவில் நேபாள மொழியும் வங்காள மொழியும் உத்தியோக மொழியாக இருக்கும்.

## சோவியத் பிரதிநிதிகள் வெளிநடப்பு

நியுயோர்க், அக். 5

ஐ. நா. பொதுச் சபையில் நேற்று தேசிய சீன வெளிவிவகார மந்திரி உரைநிகழ்த்துவதற்காக மேடைக்குச் சென்றதும் சபையிலிருந்து சோவியத் யூனியன் பிரதிநிதிகளும் ரஷ்யாவைச்சார்ந்தநாடுகளின் பிரதிநிதிகளும் வெளிநடப்புச் செய்தனர்.

தேசிய சீன வெளிவிவகார மந்திரி பேசுகையில் தகுதியில்லாத நாடுகளுக்கு ஐ. நா. வில் அங்கத்துவமளித்தால் ஐ. நா. ஸ்தாபனத்துக்கு ஆபத்து ஏற்படுமென்றார்.

தகுதியற்ற நாடுகள் ஐ. நா. வில் இடம்பெற்றால் கூட்டுப் பாதுகாப்பு சகாப்தம் மறைந்து கூட்டு ஆக்கிரமிப்பு சகாப்தம் ஆரம்பமாகிவிடும் என்று தேசிய சீன வெளிவிவகார மந்திரி கூறினர்.

## மீன் விலை அதிகரிப்பு

வேலணை, புதன்

வேலணை கிழக்கு செட்டிபுலம் மீன்பிடித்துறையின் குத்தகைக்காலம் முடிந்துவிட்டதால் மீன்பிடித் தொழிலாளர்கள் தாம் பிடித்துவரும் மீனை நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர். இதனால் மீன் விலை அதிகம் கூடிவிட்டது.

# யாழ்ப்பாணத்துக்கு ஒரு வர்த்தகப் பாடசாலை

## வர்த்தக மன்றக் கூட்டத்தில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

"படித்த மாணவர்கள் ஒவ்வொருவரும் அரசாங்க உத்தியோகம் பார்க்கவே படாதபாடுபடுகிறார்கள் பொருளாதார வளத்தைப் பெருக்கக் கூடிய வேறு எந்தத் தொழிலையாவது அவர்கள் கைகொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. இப்படியான சூழ்நிலையில் இம்மன்றம் தொழிற்துறைக் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டு உழைப்பது சாலச் சிறந்ததே. இதுவே இன்று நாட்டிற்கும், சமூகத்திற்கும் தேவையான கல்வியாகும்' இவ்வாறுயாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர் திரு. எஸ். பத்மநாதன் அகில இலங்கை வர்த்தகக்கலை மன்றத்தின் பொதுக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

மன்றப் போஷகர் ஆசிரியர் திரு. சோ. அமிர்தலிங்கம் பேசியதாவது:- "இன்று இச்சங்கம் ஐந்து முக்கிய அம்சங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றும், வர்த்தகக் கலை வளர்ச்சிக்கு எம்மாலான சகல பணிகளையும் செய்ய ஆயத்தமாக இருக்கின்றோம். இன்று யாழ்ப்பாணத்தில் லேடன் பெனியன் தொழிற்சாலை, கே. ஜி. தீப்பெட்டித் தொழிற்சாலை, மில்க் வைற் சோப் தொழிற்சாலை எனப் பல சிறு சிறு கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு மக்கள் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும். மேலும் பல கைத் தொழில்களை அமைக்க முனைய வேண்டும். இன்றைய அரசாங்கமும் கல்வித் திட்டத்தை தொழிற்துறைக் கல்விக்கமையவே அமைத்து வருகிறது. கூடிய விரைவில் இம்மன்றம் வர்த்தகக்கலைப்பாடசாலை அமைத்து இயக்க இருக்கிறது."

கூட்டத்தில் ஆசிரியர் எஸ். இராமலிங்கம், எஸ். கோபாலபிள்ளை ஆகியோர் பேசினர்.

## காராளசிங்கத்தின் உருவப்படம்

யாழ்ப்பாணம் வெள்ளி

காலஞ்சென்ற முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எம். ஆர். காராளசிங்கத்தின் உருவப் படத்தை மாவட்ட உதவி நீதிபதி திரு. ஏ. தனபாலசிங்கம் நாளை சனிக்கிழமை மாலை திரை நீக்கம் செய்து வைப்பார்.

காங்கேசன்துறை வீதியிலுள்ள வண்ணை அந்தியகால சகாயநிதிசங்கத்தின்புதிய கட்டிடத்தை திறந்துவைத்து சங்கத்தின் முதலாவது தலைவரான திரு. காராளசிங்கத்தின் உருவப்படத்தையும் திரு தனபாலசிங்கம் திறந்துவைப்பார்.

இவ்வைபவத்தில் மேயர் திரு. டி. எஸ். துரைராஜா திரு. எஸ். ஆர். கனகநாயகம் வித்துவான் பொன் முத்துக்குமாரன், கலைப்புலவர் க. நவரத்தினம், திரு. எஸ். அம்பிகைபாகன், திரு. க. கி. நடராஜன் ஆகியோரும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்களென அறிவிக்கப்படுகிறது.

## மணி வாக்கு

பரமனுடைய உலகம் வெளியில் வெகு தூரத்தில் இல்லை. உண்மைப் பரமனுலகம் இதயத்தினுள் இருக்கிறது.
—ரமணமஹரிஷி

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 20 ௳ (6-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams: EELA NADU Jaffna Phone: 389.

## தடை நீக்க வேண்டும்

தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த பார்லிமெண்ட் மெம்பர்கள் அனைவரும் தடுப்புக் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டுவிட்டது மகிழ்ச்சி அளிக்கக் கூடிய செய்தியாகும். இனியாவது அரசியல் முட்டுக்கட்டை தீர புது வழி சீக்கிரத்தில் பிறக்கவேண்டுமென்று பொது மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

இத்தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் தமிழரசுக் கட்சிமீதுள்ள தடை இன்னும் நீங்கவில்லை. கட்சிமீதுள்ள தடை நீக்கப்பட்டாலே அத்தலைவர்களும் அரசியலில் தாராளமாகப் பங்குபற்றவும், இப்போதுள்ள அரசியல் சிக்கல்களைச் சுமுகமாகத் தீர்ப்பதில் ஒத்துழைக்கவும் முடிவதாக இருக்கும்.

இம்மாதம் 10ந் திகதி செனட் சபைக்கு ஐந்து பேர்களைப் பார்லிமெண்ட் சபை தெரிவு செய்து அனுப்புவதில், தமிழரசுக் கட்சி எம்.பி.க்களுக்கும் வசதி செய்து கொடுக்கப்படுமென்று பிரதமர் செனட் சபையில் கூறியபடி, அத்தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர் ஆனால் செனட் சபை தேர்தலைவிட நாட்டில் சமுக சமரசமும், வகுப்பு ஒற்றுமையும் ஏற்பட்டு, நாடு முன்னேற வேண்டியது மிக மிக முக்கியமான காரியமாகும். இதற்கு தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்பு மிக அவசியமாகுமென்பதை பிரதமர் உணர்ந்தே இருப்பார். இதேசமயம், இலங்கையின் அரசியல் திட்டத்தைத் திருத்தி அமைப்பது பற்றி ஆலோசிக்க பார்லிமெண்டின் இரு சபைகளின் கூட்டுக் கமிட்டி நியமிக்கப்பட இருக்கின்றது. இக் கமிட்டியில் தமிழரசுக் கட்சி எம். பி.க்களுக்கும் இடம் அளிக்கப்படுமா என்று கேட்ட கேள்விக்குப் பார்லிமெண்ட் சபை முதல்வர், "எல்லாக் கட்சியினருக்கும் இடமளிக்கப்படும்" என்று தெரிவித்தார். நாட்டிலுள்ள பல முக்கிய பிரச்சினைகளுக்கும், இன்றுள்ள சோல்பரி அரசியல் திட்டமே பெரிதும் காரணமாகும். இந்த அரசியல் திட்டத்தை தக்கபடி திருத்தி, நாட்டில் சமுக ஒற்றுமையும் அமைதியும் ஏற்படும்படி செய்யவே மேற்குறித்த கூட்டுக் கமிட்டி நியமிக்கப்பெற இருக்கின்றது. இக்கமிட்டியில் தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் நியமிக்கப்பெறுவார்களென்றே எதிர்பார்க்கலாம். ஆனால் தமிழரசுக் கட்சிமீதுள்ள தடையை நீக்கினாலே, அவர்கள் இக் கமிட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளவும், தங்களிடையே கலந்து பேசவும், பொது மக்களுடன் தொடர்பு கொள்ளவும் முடிவதாக இருக்கும்.

அதையெல்லாம் பிரதமர் நன்குணர்ந்திருக்க வேண்டும். நாட்டில் இப்போது அமைதி நிலவுவதாக நிதி மந்திரியே பார்லிமெண்டில் பகிரங்கமாகத் தெரிவித்தார். ஆகவே, தமிழரசுக் கட்சிமீதுள்ள தடையை இனியும் நீடிக்கக் காரணமில்லை. அத்தடையை உடன் ரத்து செய்து, அக்கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்று, கூட்டு அரசியல் கமிட்டி மூலம் இன்று நாட்டிலேற்பட்டுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க புதிய முயற்சி செய்ய, இது நல்லதோர் வாய்ப்பாகும்.

# உலக நாடுகள் ஏன் இந்தியாவை மதிக்கின்றன?

**மதுரை பொது மக்கள் அளித்த வரவேற்பில் பிரதமர் நேரு நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் இங்கே தரப்பட்டிருக்கிறது. ராணுவ, பொருளாதாரத் துறையில் பலவீனமான இந்தியாவுக்கு உலக நாடுகளிடையே ஏன் இவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்பதை அவர் விளக்கினார்.**

எத்தனையோ பலவீனங்களும் தோல்விகளும் இருந்தபோதிலும், இன்றைய உலகில் இந்தியாவுக்கு ஒரு உன்னத ஸ்தானம் உண்டு.

"உலக நாடுகள் இந்தியாவிடம் மரியாதை காட்டுகின்றன. அதன் பேச்சுக்கு மதிப்பு இருக்கிறது. அதனிடம் பிரமாண்டமான ராணுவமோ, அல்லது பண வசதியோ இருந்து, அவ்வாறு மதிப்பு காட்டப்படவில்லை. இந்தியாவிடமும், அதன் கொள்கைகளிலும் அதன் முன்னேற்ற முயற்சிகளிலும் ஒருவித நேர்மை காணப்படுவதே அதற்குக் காரணம் என்று.

நம் முன்னால் ஏதோ பிரமாதமான அபாயம் இருப்பதால் தான் ஒருமைப்பாடு மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது என்று சிலர் மனதில் ஓர் அச்சம் இருக்கிறது. அது தவறு. நம்மை விழுங்க எத்தனையோ முதலைகள் காத்து நிற்கின்ற போதிலும் ஆசியாவையும், உலகையும் உற்று நோக்கின் ஒரு உண்மை விளங்கும். எத்தனையோ பலவீனங்களும், தோல்விகளும் காணப்பட்ட போதிலும், பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது, கடந்த சில வருஷங்களில், நாம் நன்கு முன்னேறி வந்திருக்கிறோம் என்றே சொல்ல வேண்டும்.

ஏதோ சில சில்லறை வேலைகளில் நாம் வெற்றி கண்டுவிடவில்லை. நவபாரதம் வலிமையுடன் வளர்ச்சியுறும் வண்ணம், உன்னதமான அஸ்திவாரத்தின் மேல் அதை நிர்மானித்து வரும் மகத்தான சாதனையே நாம் புரிந்திருப்பது.

மேம்போக்காகச் சில காரியங்கள் எளிதில் செய்து முடித்துவிடலாம். ஆனால் அதில் விவேகமோ தீர்க்கதரிசனமோ இல்லை.

இந்தியா சம்பந்தமாக எனக்கு ஏமாற்ற உணர்ச்சியே இல்லை. சிலர் முட்டாள்தனமாக நடந்துகொண்டாலோ, லட்சியம் கைகூடுவதற்குத் தடங்கலாக ஏதாவது நடைபெற்றாலோ, நானும் எனது சகாக்களும் எரிச்சலடையக் கூடும். அதற்குக் காரணம், எல்லோருக்கும் பொதுவான லட்சியம் விரைவில் கைகூடிவிட வேண்டும் என்பதில் எங்களுக்குள்ள ஆவல்தான்.

தனி நபர்கள் வரலாம்; போகலாம். ஆனால், இந்திய மக்களின் லட்சியம் நிலையாக இருந்துவரும்.

எனவே, நாங்கள் பணியாற்றக்கூடிய சில ஆண்டுகளில் உருப்படியாக ஏதாவதுசாதித்தாக வேண்டும் என்று விரும்புகிறோம். ஒரு வகையில் இது சுயநல விருப்பமும் கூடத் தான். இந்தத் தலைமுறையைச் சேர்ந்த பலர் பல சாதனைகளைக் கண்கூடாகப் பார்த்து வருகிறார்கள். சுதந்திரம் அடைந்ததிலிருந்து, அன்றுடம் ஏற்பட்டுவரும் பல சாதனைகளைக் காணும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியிருக்கிறது.

மக்களிடமும், கொள்கைகளிலும் நேர்மை நிலவுவதைகுறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சர்க்காரையோ அல்லது எங்கள் ஸ்தாபனத்தையோ புகழவேண்டுமென்பதற்காக நான் இப்படிச் சொல்லவில்லை. இதெல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டும், இதைத் தன்னுள்ளடக்கியதாகவும் உள்ள ஒரு பெரிய அம்சத்தையே நான் குறிப்பிடுகிறேன்.

காங்கிரஸ் மிகப் பெரியது. காங்கிரஸ் இல்லையென்றால் நானும் இருக்க முடியாது. அதைப்பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை" என்றார்.

இந்தியாவில் நாம் சாதிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது அவற்றை அடைய நாம் சரியான உத்தியைக் கையாள வேண்டியது முக்கியம்.

நமது முன்னோர்களிடமிருந்தும், குறிப்பாக காந்திஜியினிடமிருந்தும் நமக்குக் கிடைத்துள்ள மரபைக் கொண்டு நாம் தொடர்ந்து முன்னேறி வரமுடியும். எத்தனையோ சிரமங்களிருப்பினும், நம்முடைய முன்னேற்றத்தை எதனாலும் தடுத்து நிறுத்த முடியாது.

# ஆனந்தக் கண்ணீர்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

விடுதலை பெற்று வந்து சேர்ந்த எம். பி.களுக்கு ரயில் நிலையத்திலேயே கழுத்து நிறைய மலர் மாலைகளும், ஜரிகை மாலைகளும் அணியப்பட்டன.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், விடுதலை பெற்று வந்த தனது சகாக்களுக்கு மாலை சூட்டி முத்தமிட்டபோது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் இதே சமயம் தமக்கு சூட்டப்பட்ட இரண்டு மூன்று மாலைகள் டாக்டர் நாகநாதன் கழற்றி திரு. சிவசிதம்பரத்துக்கு சூட்டினார்.

## பட்டாசு வெடி, கரகோஷம், மலர்கள்

விடுதலை பெற்ற தமிழ் எம். பி.க்கள் வந்த 'யாழ்தேவி' யாழ்ப்பாணம் நிலையத்துக்குள் நுழைந்ததும் பட்டாசு வெடி கொழுத்தியும் கரகோஷம் செய்தும் மலர்கள் தூவியும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

டாக்டர் நாகநாதனுக்கு ஒரு இளம் பெண் மாலை சூட்டி "ஐயா நீடூழி வாழ்க!" என்று வாழ்த்தியது.

## வழியில் இறங்கினர்

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கிளிநொச்சி எம். பி. திரு. எஸ். சிவசுந்தரம். வவுனியா எம். பி. திரு. டி. சிவசிதம்பரம் ஆகியோர் அவரவர் தொகுதி ரயில் நிலையங்களில் அங்கு திரண்டு நின்ற மக்களால் வரவேற்கப்பட்டனர். திரு. நவரத்தினமும், திரு. சிவசுந்தரமும் யாழ்ப்பாணத்துக்கு வந்து பின்னர் தங்கள் தொகுதிகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்று கேட்கப்பட்டனராயினும் அவர்களை எதிர்பார்த்து அந்தந்த ரயில் நிலையங்களில் நின்ற மக்கள் கூட்டம் அவர்களை அங்கிருந்து அழைத்துச் சென்றன.

விடுதலை பெற்ற தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி வரவேற்கப்படுவதைப் பார்ப்பதற்காகத் கொழும்பிலிருந்தும் மற்றும் வழியிலிருந்தும் சிலர் அவர்கள்வந்த அதே ரயிலில் இங்கு வந்திறங்கினர்.

வழக்கமாக பிற்பகல் 1-25 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேரும் 'யாழ்தேவி' இன்று 35 நிமிஷம் பிந்தி 2 மணிக்கு வந்து சேர்ந்தது. ரயில் நிலயத்தில் திரண்டு நின்ற ஜனக் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிசார் இலேசாகத் தடிப்பிரயோகம் செய்ய நேரிட்டது.

ஆறு மாதங்கள் காணாமலிருந்த தந்தையையும் தாயையும் கண்ட அமிர்தலிங்கம் தம்பதிகளின் மகன் இருவரையும் கண்டதும் தாவிப் பாய்ந்து கட்டிப் பிடித்துக் கண்ணீர் சொரிந்த காட்சியும் திரு. துரைரத்தினத்தின் குழந்தை தகப்பனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கீழிறங்க மறுத்த காட்சியும் பலரின் கண்களை கலங்கச் செய்தன. கணவனைப் பிரிந்திருந்த மனைவி கணவனைக் கண்டதும் ஆனந்தக்கண்ணீர் விட்ட காட்சியையும் யாழ்ப்பாண ரயில் நிலயம் இன்று கண்டது.

## அக்கரைப்பற்றில் வித்தியா கந்தோர்

அக்கரைப்பற்று, புதன் அக்கரைப்பற்றில் ஒரு வித்தியாகந்தோரை புதிய வருடத்தோடு கல்வி இலாகா திறந்துவைத்துள்ளது. பிரஸ்தாம்ப வைபவத்துக்கு கிழக்கு மாகாண வித்தியாதிகாரி திரு. ஏ. இராசகாரியர், நிந்தாவூர் எம். பி. ஜனாப். எம். ஐ. எம். அப்துல் மஜீத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்றில் வித்தியா கந்தோர் திறக்கப்பட்டமையால் அம்பாரை மாவட்டத்தின் தென்பகுதியிலுள்ள பொதுமக்கள் வித்தியாகந்தோரின் தேவைக்காகமட்டக்களப்புக்கோ, அம்பாரைக்கோ செல்லவேண்டிய சங்கடங்கள் இனிமேல் இருக்கமாட்டாது.

## ஜயாறன் எழுதுவது

தமிழரசுக்கட்சித் தலைவர்கள் சீக்கிரத்தில் விடுதலை செய்யப்படுவரென்று, 'ஈழநாடு'தான் 10 நாட்களுக்கு முன்பே முதல்முதல் செய்தியை வெளியிட்டது

பண்டாரநாயக்கா தினத்தை முன்னிட்டு, தடுப்புக்காவலிலுள்ள தலைவர்களை மட்டுமன்றி, கே. எம். பி. ராஜரத்தினைவையும், விடுதலை செய்வார்களென்று நம்பிக்கையான ஒரு தகவல் கிடைத்ததன் மீதே அச்செய்தியை வெளியிட்டோம்.

இது உண்மைதானா? என்று சில அன்பர்கள் ஆவலுடன் கேட்டனர். நம்பிக்கையான செய்தியாக இருந்ததாலேயே வெளியிட்டோம். ஆண்டவனின் சித்தம் எப்படியோ! என்று பதிலளித்தேன்.

பண்டாரநாயக்காவின் நாள் முடிந்து ஒரு வாரமாகியும் தலைவர்கள் விடுதலை செய்யப்படாததைக் காண என்னைப் போல் பலருக்கும் ஏமாற்றம். என்றாலும் அத்தினத்தை முன்னிட்டு பல கைதிகள் இனி விடுதலை செய்யப்படுவதாக இருப்பதாக ஒரு செய்தியைக் கண்டதும், சற்றே நம்பிக்கை ஏற்பட்டது.

* * *

நேற்று முன்தினம் புதன் கிழமை மத்தியானம் 2 மணிக்குத் தலைவர்கள் விடுதலையானதும் சில நிமிடங்களில் டெலிபோன் மூலம் செய்தி நமது காரியாலயத்துக்குக் கிடைத்துவிட்டது. காரியாலயத்தில் ஒரே பரபரப்பு. டெலிபோன் மூலம் பல அன்பர்கள் ஆவலுடன் விசாரித்தவண்ணமிருந்தனர்.

தலைவர்கள் விடுதலையான செய்தியை உடனே போஸ்டர்கள் மூலம் ஊரெங்கும் முதல் முதலாகத் தெரிவித்ததுடன், மாலையிலேயே விசேஷ பதிப்பும் வெளியிட்டு, இம்மகிழ்ச்சியான செய்தியை 'ஈழநாடு' யாழ்ப்பாண நகரெங்கும் அறிவித்தது. இரவாகியும் கூட இந்த விசேஷ பதிப்புக்கு ஏகப்பட்ட கிராக்கி. 'ஈழநாடு' செய்யும் சேவையைப் பல அன்பர்கள் பாராட்டினர்.

* * *

வவுனியா தனிக்காட்டு ராஜாவான சுந்தரலிங்கத்தாரைப் பல வருடங்களுக்குப் பின் நேற்றுக் கண்டேன். தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் விடுதலையை அவர் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

இப்போதைய அரசியல் நிலைமைபற்றி அவரது கருத்தைக் கேட்டேன்.

"முன்னரெல்லாம் தமிழர்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் யார் சொல்லுவதைக் கேட்பதென்றும் கூறிவந்தார்கள். ஆனால் ஈழத் தமிழகம், தமிழரசுக்கட்சியினரையே பெரும்பான்மையாகத் தெரிவு செய்து பார்லிமெண்ட் சபைக்கு அனுப்பியுள்ளது. ஆகவே தமிழரிடையே பிளவு ஏற்பட்டுள்ளதாகக் கூறமுடியாது. தமிழரசுக்கட்சியினரே இன்றைய நிலையில் என்ன செய்வதென்று தீர்மானிக்க விட்டுவிடுவதே ஜனநாயக தர்மமாகும். இதில் பிறர் தலையிடுவது சரியல்ல" என்று தெரிவித்தார்.

இனி என்ன? இதைப்பற்றியே இப்போது ஊரெல்லாம் ஆவலுடன் பேச்சாக இருக்கிறது.

# ஸ்தலஸ்தாபன நிர்வாகத்தில்! குறுக்கீடு

## விசாரணை நடத்துமாறு மேயர் மகஜர்

யாழ்ப்பாணம்,வியாழன் 'தேவையற்ற சிபார்சுகளும், தலையீடுகளும் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனைப் பாதிப்பதாகத் தெரிகிறது. இதனல் இந்தக் கமிஷனில் கடமையாற்றும் ஒரு பகுதி உத்தியோகஸ்தர்கள் மாநகர சபையின் ஒழுங்கு விதிகளையும், அவர்களுக்கிருக்கவேண்டியபொறுப்பையும் மீறி வருகிருர்கள். ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனே தனது நிர்வாகத்தை சரிவர நடத்த முடியாதிருச்கிறது. நான் கருமமாற்ற முடியாது தடைப்படுத்தப்பட்டு வருகின்றேன்' மேற்கண்டவாறு யாழ்ப்பாண நகரமேயர் திரு. டி. எஸ். துரைராஜா பிரதமமந்திரிக்கும் மற்ற மந்திரிசளுக்கும் அனிப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தமது மகஜரில் தெரிவித்திருப்பதாவது:

ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் மாநகர சபை முறையாக நிர்வகிப்பதில் எனக்குபோதிய ஒத்துழைப்புத் தருவதில்லை.

யாழ்ப்பாண மாநகரசபை கமிஷனர் திரு.ஏ.வி. சின்னையாவின் மாற்றம்பற்றி அவர் குறிப்பிட்டுள்ளதாவது.

1. 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் திரு. சின்னையா ஏப்ரல் மாதத்திலிருந்து நுவரேலியாவுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இரு மாத அறிவித்தல் அவருக்கு அனுப்பப்பட்டது.

2. ஸ்தலஸ்தாபன கமிஷனல் திரு. சின்னையாவின் மாற்றம் ஜூன் மாதம் வரை தாமதிக்கப்பட்டது.

3. 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நுவரெலியா மாநகர சபையில் கமிஷனராகக்கடமையாற்றிய திரு. கே. சண்முகம் யாழ்ப்பாண மாநகரசபைக் கமிஷனராகக் கடமையாற்றுவது பற்றி அறிவித்திருந்தார்.

4. 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து காலிக்கு மாற்றப்பட்டுள்ளதாக திரு. சின்னையாவுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் தமது இடமாற்றத்தை இந்த வருட முடிவு வரை ஒத்திப்போடுமாறு கேட்டார்.

5. 19-8-61-ல் அவரது இடமாற்றம் ஒத்திப்போட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் 1962-ம் வருடம் ஜனவரி 1-ந் திகதி ஒத்திப்போடப்பட்டிருப்பதாகவே கருதப்பட்டது.

6. 26-8-61-ல் திரு.சின்னையா காலிக்கு இடமாற்றம் செய்யப்படுவது ரத்துச் செய்யப்பட்டதாகவும் அவரை 11-9-61ல் நீர்கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவருக்கு தந்தி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக எனக்கும் அவருக்கும் முறையே கடிதங்கள் அனுப்பப்பெற்றன.

1-9-61-ல் திரு. சின்னையா நீர்கொழும்புக்கு இடமாற்றம் செய்யப் பட்டிருப்பதாகவும் 11-9-61-ல் அங்கு வேலையைப் பாரமேற்கும்படியும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த கமிஷனர் இடமாற்றம் செய்யப்படவில்லை. இரு கமிஷனர்கள் ஒரே இடத்தில் ஒரே நேர காலத்தில் கடமையாற்றும் இணையற்ற நிர்வாக முறை இது

திரு. டி. எஸ். துரைராஜா ஸ்தலஸ்தாபன கமிஷனின் கீழ்க்கண்ட விஷயங்கள்பற்றி விசாரணை நடத்துமாறு கேட்டுள்ளார்.

1. மாநகரசபை கமிஷனர் திரு. சின்னையாவுக்கு வழங்கப்பட்ட பல இடமாற்ற உத்தரவுகள் நீர்கொழும்பில் ஒரே காலத்தில் இருகமிஷனர்கள் கடமையாற்ற உத்தரவு அனுப்பப்பட்டமை.

2. திரு. சின்னையா நுவரேலியாவுக்கு மாற்றப்பட்டது ஒத்திவைக்கப்பட்டது பற்றியும் திரு. சண்முகம் யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் செய்வது ஜூன் மாதம் 1-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது பற்றியும் திரு. சண்முகத்துக்கு நுவரேலியா மேயருக்கும் தெரிவிக்கப்படாதமை.

3. திரு. தாமோதரம்பிள்ளைக்கு வழங்கப்பட்ட தற்காலிக வேலை நீக்க உத்தரவு மற்றொரு குமாஸ்தாவின் இடமாற்றமும் சம்பந்தமான ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் குழப்பமான உத்தரவுகள்.

4. ஒழுங்கு நடவடிக்கைகளுக்காக இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்களை மீண்டும் அதே இடத்துக்கு இடமாற்றம் செய்தல்.

## ஆசிரியர்களில் தங்கியிருப்பவர்களும்

### உதவிப்பணம் பெறுவர்

கொழும்பு, புதன்

ஆசிரியரொருவர் ஆசிரிய சேவையிலிருக்கும்போது இறந்தால் அவரின் ஆதரவில் தங்கியிருப்பவருக்குக் குறிக்கப்பட்ட ஒரு தொகையை உதவிப் பணமாக அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது,

பாடசாலை ஆசிரியர்களின் பென்ஷன் விதிகள் இதற்கேற்பத் திருத்தி அமைக்கப்படும். இது 5 வருடம் சேவை செய்தபின்னர் கிடைக்கும். ஒரு வருடம் பென்ஷன் தொகைக்கு சமமாக இருக்கும்.

## ஐ. நா. மீது ஷோம்பே புகார்

எலிஸபெத்வில்லி, அக். 5

கடாங்காவில் ஐ. நா. வின் தலையீடு நிறுத்தப்பட்டால் தான் காங்கோ பிரதமர் திரு. அடௌலாவை தாம் சந்தித்துப் பேசமுடியுமென்று திரு. ஷோம்பே அறிவித்துள்ளார்.

ஐ. நா. தலையீடு காங்கோவில் நிறுத்தப்பட வேண்டும். ஐ. நா. நடவடிக்கை காங்கோவில் நிலைமையை மேலும் குழப்பமடையச் செய்துள்ளதென்று திரு. ஷோம்பே கூறினர்.

## பஞ்சாபில் பலர் விடுதலை

சண்டிகார், அக். 5

பஞ்சாபி சுபா கோரிக்கை சம்பந்தமாக பஞ்சாபில் கிளர்ச்சியை ஆரம்பிக்க முயற்சிசெய்ததாகக் கருதப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் எல்லோரையும் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. பலாத்கார நடவடிக்கை சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்களென அறிவிக்கப்படுகிறது.

## கல்பிரயித் பாராட்டு

புதுடில்லி, அக். 5

காங்கோவில் இந்திய துருப்புக்கள் சிறந்த சேவை செய்கின்றனவென்று இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதர் திரு. கல்பிரயித் பாராட்டினர்.


### வரி விளம்பரம்

#### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

#### அறிவித்தல்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலிருக்கும் திரு. குருசாமி தனபாலசிங்கம் எங்களது யாழ் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தின் "யாழ் சோப்" விற்பனவுக்கு யாழ்ப்பாண மாவட்ட வியாபாரப் பொறுப்பாளராக இம் மாதம் நாலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இத்தால் அறியத்தருகிறோம். யாழ் இன்டஸ்றீஸ் லிமிட்டெட், 97, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

#### விற்பனைக்கு

காங்கேசன்துறை பலாலீ றேட்டில் (ஊறணி) வேதக் கோவிலுக்குப் பின்புறமாக 22 1/2 பரப்புக் காணி நிலம் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: ஏ. கந்தையா, இளைப்பாறிய ஓவிசர், சித்தங்கேணி.


தனியூற்று கொலை வழக்கு

# புதிய ஜூரிகள்முன் விசாரணை நடைபெறும்

யாழ்ப்பாணம், வியாழன்

தனியூற்று கொலை வழக்கு விசாரணை திடீரென்று நிறுத்தப்பட்டு தற்போதை ஜூரிமார் சபையைக் கலைத்து புதிய ஜூரிமார்முன் விசாரணை நடைபெறவேண்டுமென வடமாகாண அசைஸ் நீதிமன்ற நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா நேற்று உத்தரவிட்டார்.

தனியூற்று கொலை நடந்த இடத்துக்கு நீதியரசரும் ஜூரிமாரும் வழக்கறிஞர்களுப்நேற்று முன் தினம் சென்று பார்வையிட்டுத் திரும்பியபின் நேற்று நீதிமன்றம் மீண்டும் கூடியது.

ஸ்தலத்துக்குச் சென்று திரும்பிய பொழுது ஏழு ஜூரிமார்களில் நால்வரும் தனியாக பிரிந்து சென்றுவிட்டதாக அசைஸ் குமாஸ்தா நீதியரசரின் கவனத்துக்துக் கொண்டுவந்தார்.

நான்கு ஜூரிமார்களும் பழையில் ஒரு தோட்டத்தில் காணப்பட்டதாக, எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கமும் தெரிவித்தார்.

திருவாளர்கள் ஏ. ஆர். ஜேசுதாசன், கே. கே. ஐயாத்துரை, வி. சுப்பிரமணியம், ஈ. எஸ் கிருஷ்ணசுவாமி ஆகியநான்கு ஜூரிமார்களையும் எழுந்து நிற்கும்படி நீதியரசர் கூறினர்.

நீதியரசர் அவர்களிடம் கூறியதாவது:

இக் குற்றச்சாட்டு உண்மைதானு? சகல ஜூரிமார்களும் ஒன்ருகக் கூடி கோர்டுக்கு வரவேண்டுமென நான் அறிவித்திருந்தது உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் நடந்து கொள்ளும் முறை சந்தேகிக்கக்கூடியதாய இருக்கிறது. இவ்வித ஜூரிகள் கோர்ட்டில் வழக்கு சம்பந்தமான தீர்ப்புக்கு அனுமதிக்கக் கூடாது. இந்த நிலையில் வழக்கை இன்னுமொரு முறை வேறு ஜூரிகளுடன் விசாரணை செய்ய வேண்டியிருபபதாக நான் வருந்துகிறேன். நீதி வழங்கினல் மட்டும் போதாது. வழங்கியது நீதியாகக் கருதப்படவும் வேண்டும்.

ஜூரிமார் சபை முதல்வர் திரு. ஜேசுதாசன் இது சம்பந்தமாக விளக்குகையில் தெரிவித்ததாவது:

"பிரிவினைக்கான சத்தியப் பிரமாணம் எடுத்தபோது நாங்கள் மத்தியான போஜனத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தோம். நாம் செல்வதில் எதுவித நஷ்டமுமில்லையென்றெண்ணியே நாம் சென்ருேம். கோர்ட்டின் ஒழுங்கு முறையை மீறியதற்காக நாம் வருந்துகிருேம்"

நீதிபதி இதை ஏற்றுக்கொண்டு வேறு ஜூரிமார் சபை முன்னிலையில் அக்டோபர் 11ம் திகதி வழக்கு விசாரணையை நடத்துவதென நீதிபதி உத்தரவிட்டார்.

## ரப்பர் புனர் நடுகைத் திட்டம்

### 1968-ம் ஆண்டுவரை நீடிப்பு

கொழும்பு, புதன்

ரப்பர் புனர்நடுகை உதவித் திட்டகாலத்தை 1968-ம் வருடம்வரை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1953-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் அடுத்த வருடத்துடன் முடிவடைவதற்கிருந்தது. ஆனல் ரப்பர் கட்டுப்பாட்டதிகாரி திரு. பி. மகாதேவா கேட்டுக்கொண்டதற்கிணங்க மேலும் 5 வருடங்களுக்கு இத்திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 151,000 ஏக்கர் நிலத்தில் ரப்பர் புனர்நடுகை செய்யப்பட்டுள்ளது வருடாவருடம் 22,000 ஏக்கர் நிலத்தில் புனர்நடுகை செய்யப்பட்டுள்ளது.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்–2.

சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ.
குருநெனிய.

மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மோனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# விடுதலை பெற்ற எம். பி.க்கள் 19ந் திகதி கொழும்பில் சந்திப்பர்

## கிழக்கு மாகாண தலைவர்கள் இன்று வீடு திரும்புவர்

கொழும்பு, வியாழன்

தடுப்புக்காவலிலிருந்து விடுதலை பெற்ற கிழக்குமாகாணத் தலைவர்கள் திரு. என். ஆர். இராஜவரோதயம், திரு. எஸ். எம். இராசமாணிக்கம், திரு. எஸ். இராஜதுரை, திரு. பி. மாணிக்கவாசகர் ஆகியோர் இன்று இரவுதான் கொழும்பிலிருந்து தங்கள் இடங்களுக்குப் பிரயாணமாகின்றனர்.

நேற்றிரவே தங்கள் வீடுகட்குத் திரும்புவதற் இருந்த இவர்களுக்கு நேற்று பிரயாணம் செய்ய வசதியேற்படாமற் போய்விட்டது.

தடிழரசுக் கட்சியின் தலைவரும் பட்டிருப்பு எம். பி. யுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம், மட்டக்களப்பு எம். பி. திரு. எஸ். இராஜதுரை, கல்குடா எம். பி. திரு. பி. மாணிக்கவாசகர் ஆகியோர் மட்டக்களப்புக்கும் திரு. என். ராஜவரோதயம் திருக்கோணமலைக்கும் இன்று காலை போய்ச் சேர்வார்கள்.

விடுதலை பெற்ற எம். பி.க்கள் எல்லோரும் மீண்டும் இம் மாதம் 19-ந் திகதி கொழும்பில் சந்திப்பார்கள். அன்று பார்லிமெண்ட் கூட்டத்தில் இவர்கள் கலந்து கொள்வார்கள்.

---

## கஷ்டகாலத்தில் உதவ இன்சூரன்ஸ் திட்டம்

கொழும்பு, வியாழன்

அரசாங்கத்திலும் தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்குக் கஷ்ட காலங்களில் உதவு முகமாக இரு விதத்தில் உதவக்கூடிய சமூக இன்சூரன்ஸ் திட்டத்தை உருவாக்கவேண்டுமென அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சங்கம் அரசாங்கத்திடம் கருத்து தெரிவித்துள்ளது.

தேசிய சுகாதார இன்ஸ்சூரன்ஸ் திட்டமும், இறப்புக்கான நிதி உதவித் திட்டமும் உருவாக்கப்பட வேண்டுமென சங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது.

---

## தீவுப்பகுதி தமிழாசிரியர் சங்க நிர்வாகிகள்

வேலணை, புதன்

தீவுப்பகுதி தமிழாசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் சனிக்கிழமையன்று வேலணை அரசினர் மத்தியகல்லூரி மண்டபத்தில் திரு. அ. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அ. சபாபதிப்பிள்ளை. துணைத்தலைவர்கள்: தி. கணபதிப்பிள்ளை, இ. தா. இராசரத்தினம், வி. வ. நல்லதம்பி. செயலாளர்: க. சிவலிங்கம். துணைச்செயலாளர்: வை. தியாகராசா. பொருளாளர்: சு. நமசிவாயம்.

---

## வேலை வழங்கப்படும்

கொழும்பு, வியாழன்

அக்டோபர் 31ம் திகதியிலிருந்து வேலை நீக்க அறிவித்தல் வழங்கப்பெற்ற எயர்சிலோன் ஊழியர்களுக்கு ஏற்கனெவே வேறு இடங்களில் வேலை கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தால் நடாத்தப்படும் கார்ப்பரேஷன்கள் பிரதம மந்திரியின் அறிவித்தலின் பிரகாரம் இவர்களுக்கு வேலை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளன.

---

## நகரசபையைக் கலைக்குமாறு

### காலி எம். பி. கோரிக்கை

காலி, வியாழன்

'காலி மாநகரசபை இந்த நகரத்துக்கு தண்ணீர்த் திட்டத்தைஅமுல் நடத்துவதில் தனது திறமையைக் காட்டிவிட்டது. எனவே சபையைக் கலைத்துவிட்டு நிர்வாகப் பொறுப்பை ஒரு விசேஷ கமிஷனிரிடம் ஒப்படைக்க வேண்டும்.'

இவ்வாறு காலி எம். பி. திரு. டபிள்யு. தகநாயகா காலி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

55-வது வயதடைந்த நாட்சம்பளம் பெறும் ஊழியர் நகரசபையிலிருந்து ஓய்வு பெற வேண்டுமென நகரசபை கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்து நடைபெற்ற ஆட்சேபக்கூட்டத்திலேயே திரு தகநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:-

மத்திய அரசாங்கம் இதற்கென பணம் ஒதுக்கியிருந்த போதும் மாநகரசபை இதை செயல்படுத்தவில்லை.

நாட்சம்பளம் பெறுபவர்கள் 55 வயது வந்ததும் ஓய்வு பெறவேண்டுமென்றும் அதிக சம்பளம் பெறுபவர்கள் 60 வயது வரை கடமையாற்றலாமென்றும் சட்டமியற்றப்பட்டிருப்பது ஏனென்று கேட்க விரும்புகின்றேன்.

---

## கலகம் காரணமாக 5 பேர் காயம்

கொழும்பு, வியாழன்

ஸ்கின்னர் வீதியிலுள்ள கள்ளுத்தவறணைக்கு எதிரே நடைபெற்ற கலகத்தின் காரணமாக ஐந்துபேர் காயமடைந்தனர். ஒருவர் படுங்காயமடைந்தார். இக்கழ்கத்தின்போது வெடிகுண்டு வீசப்பட்டதாகத் தெரிகிறது.

காயமடைந்தவர்களுள் கள்ளுத்தவறணை மனேஜரும் ஒருவர். காடையர்களைக் கொண்ட ஒரு கோஷ்டி இவரைத் தாக்கியபோதே கலகம் ஏற்பட்டதாக பொலிசார் கருதுகின்றனர்.

கலகத்தில் சம்பந்தப்பட்டவர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

---

## திருட்டுக் குற்றத்தில் 2இராணுவ சிப்பாய்கள்

காலி, வியாழன்

இப்பகுதியில் நடைபெற்ற திருட்டுக்கள் கொள்ளையடிப்புக்கள் முதலிய குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாக கமுனு இராணுவப் படையைச் சேர்ந்த இரு சிப்பாய்களையும் இப்பகுதிக் கிராம விதானையின் மகனையும் முன்னர் பஸ் கண்டக்டராக இருந்த ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சமீபத்தில் தங்கத்தெரயிலுள்ள லோண்டரி கொள்ளையடிக்கப்பட்டது. ஒரு பள்ளிச் சிறுவன் பொலிசாருக்கு கொடுத்த தகவலின் பேரில் பொலிஸார் சென்று பார்த்தபோது கொள்ளையடிக்கப்பட்ட இடத்துக்கருகில் இந்த நால்வரும் காணப்பட்டனர். பொலிஸார் இவர்களை ஸ்தலத்திலேயே கைது செய்தனர்.

இவர்கள் தொடர்ந்து பல திருட்டுக்களை செய்துள்ளார்கள் என பொலிஸார் நம்புகின்றனர். நேற்று காலி நீதிபதி முன்னிலையில் நால்வரும் இன்ஸ்பெக்டர் சான்டர்ஸினல் ஆஜர் செய்யப்பட்டனர்.

---

## 97 பஸ்கள் எங்கே?

### இ. போ. ச. விசாரணை

கொழும்பு, வியாழன்

97 பஸ்களை இழந்ததாகக் கருதுவதென இ. போ. ச. அங்கீகரித்துள்ளது. கடந்தவருடம் செப்டம்பர் 17-ம், 18-ந் திகதிகளில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரத்தின்போது 145 பஸ்கள் இடத்தில் இருக்கவில்லையென்றும், இதில் அண்மையில் 47 பஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் 97 பஸ்கள் இழந்ததாகக் கருதப்பட்டதாகவும் தெரிகிறது.

இவ்விபரம் இதற்கென நியமிக்கப்பட்ட விசாரணைச் சபையினல் வெளியிடப்பட்டது.

---

## 5-வது இடமாற்ற உத்தரவு

கொழும்பு, வியாழன்

அக்டோபர் 1-ம் திகதியிலிருந்தும் நவம்பர் 15-ந் திகதியிலிருந்தும் டாக்டர்கள் இடமாற்றம் செய்வது சம்பந்தமாக 4 தனிப்பட்ட இடமாற்றப் பட்டியல்கள் சுகாதார இலாகாவினல் அனுப்பப்பட்டுள்ளன.

செப்டம்பா 27-ந் திகதிக்கு முன்னர் அனுப்பிய இடமாற்ற உத்தரவுகளை ரத்துச் செய்து ஐந்தாவதும் முடிவானதுமான ஒரு உத்தரவை சுகாதார இலகா அனுப்பியுள்ளது.

---

# 'அரசாங்கத்தை குறைகூற முடியாது'

## உதவி கல்வி மந்திரி விளக்கம்

பதுளை, புதன்

நாட்டில் பெருகிவரும் ஜனத்தொகைக்கு ஈடாக நாட்டின் தொழில்வளம், பொருளாதாரம் ஆகியவை வளர்ச்சியடையவில்லை யென்று உண்மையை தாம் ஒப்புக் கொள்வதாக உதவிக் கல்வி மந்திரியும் நக்குவானை எம். பி. யுமான திரு. வி. டி. ஜி. கருணரத்தின இங்கு உபதபாற்கந்தோர் திறப்புவிழாவுக்குப்பின் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

ஜனத்தொகைப் பெருக்கத்துக்கு ஈடாக தொழில் வளத்தையோ உணவு உற்பத்தியையோ பெருக்காததற்கு இன்றைய அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்த முடியாதென்றும் இதற்குமுன்னிருந்த அரசாங்கங்கள் அதில் அக்கறை செலுத்தவில்லையென்றும் திரு. கருணரத்தின தெரிவித்தார்.

ஒவ்வொரு வருடமும் ஜனத்தொகை பெருகிக் கொண்டு வந்துள்ள போதிலும் அதைச் சமாளிப்பதற்கு உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தையோ தொழில் வளர்ச்சிக்குரிய திட்டங்களையோ முன்னைய அரசாங்கம் உருவாக்கவில்லை என்று திரு. கருணரத்தின கூறினர்.

உணவு உற்பத்திப் பெருக்கமோ தொழில் வளர்ச்சியோ சரியான திட்டமில்லாமல் ஒரே நாளில் செய்து முடித்துவிடக் கூடியதல்ல என்று உதவி கல்வி மந்திரி தெரிவித்தார்.

விவசாயம் பழைய முறையிலேயே செய்யப்பட்டு வருவதால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாமலுள்ளதென்று விஞ்ஞான முறையில் விவசாய செய்கைக்கு வழி செய்ய வேண்டுமென்றும் திரு. கருணரத்தின கூறினர்.

---

# பல்கலைக்கழக பரீட்சைக்கு வெளிமாணவர் தோற்றலாம்

கொழும்பு, வியாழன்

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உயர்தர பரீட்சைகளுக்கு வெளி மாணவர்கள் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

இந்தப் பரீட்சைகளில் வெளி மாணவர்கள் பங்குபற்றுவதற்கு அனுமதியளிக்கவேண்டுமென கல்வி அமைச்சு பல்கலைக்கழக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளது.

இந்த மாணவர்கள் பரீட்சைக்கு தயார் செய்யும் போது பல்கலைக்கழகத்திலிருக்கும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளெல்லாம் தமக்கு அளிக்கப்படவேண்டுமெனக் கோரக்கூடாது என்ற நிபந்தனையிலேயே இவ்விதசலுகை அளிக்கப்பட்டுள்ளது என வெளிமாணவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

723 வெளிமாணவர்களுக்கு பல்கலைக் கழகததில் பயிற்சி அளிக்க வசதிசெய்யும் பொருட்டு அரசாங்கம் ரூ. 149,000 ஒதுக்கியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

---

## அரசாங்க ஊழியர் உரிமைகள்

### விசாரணை செய்ய கமிட்டி நியமனம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்க அரசியல்உரிமைகள் வசதிபற்றி விசாரணை செய்வதற்கு பதில் நிதிமந்திரி திரு. ஜோர்ஜ் ராஜபக்சா ஓர் உப கமிட்டியை நியமித்துள்ளார்.

இக்கமிட்டியின் தலைவராக வர்த்தக அமைச்சின் மேலதிக நிரந்தரக்காரியதரிசி திரு. எச். ஈ. தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். அரசாங்க ஸ்தாபனக் கட்டுப்பாட்டு அதிகாரி உதவி தொழில் கமிஷனர் அரசாங்க ஊழியர் தொழிற்சங்க சம்மேளனப் பிரதிநிதிகள் இருவர் தொழிற்சங்கமெதையும் சேராத அரசாங்க ஊழியர் ஒருவர், ஆகியோர் இக்கமிட்டியில் இடம்பெற்றுள்ளனர்.

அரசாங்க ஊழியர் சட்டவிதிகளை நன்கு ஆராய்ந்து தேவையான மாற்றங்களைச் சிபார்சு செய்வது இவர்களது பிரதான நோக்கமாகவிருக்கும்.

---

## பழம் தம்பதிகளுக்கு இப்போது பதிவுத் திருமணம்

சதவத்தை, வியாழன்

இப்பகுதியிலுள்ள விவாகப் பதிவுகாரருக்கு இன்று வேலை மிகவும் நெருக்கடியாக இருக்கும். காரணம், அவர் இன்று 10 திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டியிருப்பதே. அதற்கு வழக்கமாகக் செலுத்தப்படும் பணத்தொகையை தம்பதிகள் கொடுக்கத் தேவையில்லை.

புதிதாக விவாகப் பதிவு செய்துகொள்ளப் போகும் 'பழைய' தம்பதிகளில் சிலருக்கு வயது எழுபதைத் தாண்டிவிட்டது. இவர்களுக்கு பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

இந்தவித அபூர்வ விவாகப் பதிவு எதற்காக இவ்வளவு திடீரென நடைபெறுகிறது என்ற கேள்வி எழலாம்!

சதவத்தை சிரேஷ்ட பாடசாலையிலுள்ள சமூக நலசேவை கமிட்டியினர் சட்டப்படி திருமணமாகாத 40 தம்பதிகளைத் தேடிப்பிடித்துள்ளார்கள். இவர்களில் சிலருக்கு எட்டுக் குழந்தைகளுக்கு மேலுண்டு. பராமரிப்பு அதிகாரிக்கு உதவி செய்யும் முகமாகவே இவர்களைத் திருமணப்பதிவு செய்து கொள்ளுமாறு கமிட்டியினர் வற்புறுத்தியுள்ளனர்.

---

## அந்நிய உதவிகளுக்கு ராஜாஜி கண்டனம்

ஒன்றையொன்று பயமுறுத்திக்கொண்டு, யுத்தவெறியுடனிருக்கும் வல்லரசுகளிடமிருந்து பெறும்கடன்களின் அடிப்படையில் இந்தியா திட்டமிடுவது சிறிதும் நம்பமுடியாத அஸ்திவாரத்தின் மீது கட்டுவதுபோலாகும் என்று ஒரு கட்டுரையில் ராஜாஜி குறுப்பிட்டுள்ளார்.

பயமுறுத்தல்கள் நடவடிக்கைகளாக மாறி, முடிவின் ஆரம்பம் தோன்றுவது எந்த நாளிலும் ஏற்படும் என்றுஉலகம் தயாராக இருக்கவேண்டிய தன்மையில், இரு வல்லரசுகள் பரஸ்பரம் செய்துகொண்டிருக்கும் பயமுறுத்தல்கள் உள்ளன என்று ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் கூறினர்.

ராஜாஜி மேலும் கூறியதாவது:- பகிரங்கமாகப் பயமுறுத்தல்களை தொடுக்கும் திட்டத்தை இரு தரப்பினரும் இப்போது மேற்கொண்டுள்ளனர். பயமுறுத்தல்களை நிறைவேற்ற வேண்டிய கௌரவத்தை காப்பாற்ற நாடுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

பயமுறுத்தல்கள் வெற்று மிரட்டல்கள் அல்ல. பயங்கரத் தன்மையுள்ள பொறுப்புகளை அவை உண்டாக்குகின்றன. அவை தடுப்பு நடவடிக்கைகளாகக் கருதப்பட்டபோதிலும், அவை அவ்வாறு இருப்பதில்லை. அவற்றை நிர்வாகங்கள் நடைமுறையில் கொண்டுவரவேண்டிய கடமை ஏற்படுகின்றது.

இந்தியாவின் திட்டங்களுக்கு (போரின்) விளிம்பில் நிற்கும் நாடுகளிடமிருந்து உதவியை காங்கிரஸ் சர்க்கார் நம்பிக்கொண்டிருப்பது, வருங்கால மதசார்பற்ற கற்பனை சுபிட்சத்துக்கு நமது மக்களின் இரத்தத்தையும், கண்ணீரையும் முதலீடு செய்வதாகும்.

இந்த நாடுகள் கொடுக்கும் உதவியிலிருந்து கற்பனை சுபிட்சத்தை நமது பேரக் குழந்தைகள் காண்பார்கள் என்ற நம்பிக்கையில் காங்கிரஸ் ஆட்சி மக்கள்மீது வரி விதித்து இப்போதைய தலைமுறையினரின் வாழ்க்கையை அவதிக்குள்ளாக்குகிறது.

கடன் விவகாரங்களின் விளைவாக உடனடியாக என்ன ஏற்படும் என்றால், பொறுப்பற்ற நாடுகளுக்குப் பத்திபுகட்டும் தார்மீக செல்வாக்கை நாம் பயன்படுத்த இயலாது போய்விடும்.

நமது திட்டத்திற்கு நாம் கடன் பெற்ற இந்த நாடுகளிடம் நாம் பலவாறு கடமைப்பட்டிருப்பதால் நல்ல நடத்தை கொள்ளுமாறு அவற்றைக் கோரும் சக்தியை நாம் இழந்தவர்களாக இருக்கிறோம். இவ்வாறு ராஜாஜி கூறியுள்ளார்.

---

## சுகாதார இலாகாவில் நிதி நெருக்கடி

கொழும்பு, வியாழன்

திறைசேரி நிதிசம்பந்தமான அதிகார வாறண்டுகளை வழங்காததால் பல அரசாங்க இலாகாக்களில் வேலை தடைப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சுகாதார இலாகா இவ்வித வாறண்டை நேற்று மாலைவரை பெறாததால் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக சுகாதார இலாகாவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வாறண்ட் அனுப்பப்படாததால் உத்தியோகத்தர்களுக்கு பிரயாணத்துக்கான முற்பணம் கொடுப்பதை சென்ற 4 நாட்களாக சுகாதார இலாகா கொடுக்கவில்லை.

வழக்கமாக இந்த வாறண்ட் ஒவ்வொரு அரசாங்க இலாக்காவுக்கும் அக்டோபர் 1-ந் திகதி கிடைத்துவிடுகின்றது.

உதவி நிதிமந்திரி இந்த வாறண்டுகளில் இன்னும் கையொப்பமிடவில்லை எனத் தெரியவருகிறது.



# மங்கையர் உலகம்



# அதிகம் பேசுவோர் ஆண்களா? பெண்களா?

## அனைவரும் அறியவேண்டிய ஆராய்ச்சி

பெண்கள்தான சும்மா பேசிப பொழுது போக்குவார்கள் என்று சொல்வதுண்டு அல்லவா? ஆனல் அபூர்வமான சமுகவியல் ஆராய்ச்சியொன்று இதற்கு முரண்பட்ட முடிவைத் தந்துள்வது. அதாவது பெண்களிலும் பார்க்க ஆண்களே வம்பளந்து பொழுது போக்குவர் என்பதாகும். ஆண்கள் அதிகமாகப் பேசித்தள்ளுவதற்குப் பெண்களும் பொறுப்பாவர் என்ற இந்த உண்மையைச் சமுகவியலாராய்ச்சியாளர் அனைவரும் கருதுகின்றனர். அடிமைத் தனத்தைத் தசர்த்துச் சுயேச்சையாக வாழப் பெண்கள் முற்பட்டு உழைத்து வருகிறார்கள். பெண்களின் இம்முயற்சிகள், ஆண்கள் தமது நண்பர்களுடன் வீண் வார்த்தை பேசிக் கொள்வதற்கு விருந்தாக அமைந்துள்ளது. இதன் உண்மையைக் கீழ்வரும் தத்துவத்திலை உணர்ந்து கொள்ளலாம். அடிப்படையான பாதுகாப்பு இல்லாத வேளைகளில் தான் வீண்வார்த்தை பேசும் பழக்கம் ஏற்படுகிறது. அதாவது, தற்பாதுகாப்புக்காகவே ஒருவர் மற்றவர்களைப்பற்றி வீண் வார்த்தை பேசுவார். எமது முக்கியத்துவத்தை நிலைநாட்டுவதற்காகவே நாம் மற்றவர்களைப் பற்றிப் பேசிக் கொள்கிறோம். எமது முக்கியத்துவம் பற்றி நாமே தெம்பு அடைந்து கொள்வதற்காகப் பிறரைப் பற்றிப் பேசுகிறோம். சமுகத்திலும், உத்தியோகத் துறையிலும் பெண்கள் அதிகம் பங்கு பற்றி வருகிறார்களாகையால், ஆண்கள் தற்பாதுகாப்பு அற்ற உணர்ச்சி பெற்று வருகிறார்கள். எனினும் 100க்கு 99 ஆண்கள் இதை வெளிப் படையாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

### காரணம்

ஆண்கள் பெண்களிலும் பார்க்க அதிகம் வம்பு அளப்பவர்கள் என்ற முடிவுக்கு வந்த ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் பின்வருமாறு கருதுகிறார். உத்தியோகத் துறைகளிலும் வீட்டிலும் நுண்கலை அறிவிலும் பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக வாழ்ந்து வருவது ஆண்களின் அதிகாரத்தையும் முக்கியத்துவத்தையும் குறைத்துள்ளது. இதன் விளைவாகவே தமது முக்கியத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டு ஆண்கள் வம்பளக்க ஆரம்பித்துள்ளார்கள்.

கொடூரமான வகையில் வீண் வார்த்தை பேசுதல் கூடாது. தீய முறையில் கையாளத வரை இப்பழக்கம் மனிதனின் தேவைகளில் ஒன்று எனலாம். கஷ்டங்களிலும் இக்கட்டான சமயங்களிலும் அதுஒரு பாதுகாப்புக் கருவியாகவும் இருக்கிறது. சுவாரஸ்யமாகப் பேசிப் பொழுது போக்கும் பழக்கம் வாழ்க்கையைப் பற்றித் தூய மனப்பான்மை கொண்டுள்ளமைக்கு எடுத்துக்காட்டாகுமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஏனெனில் அவ்வாறுபொழுது போக்குவதனல் தமது மனக் கஷ்டங்களை ஒருவாறு குறைத்துக் கொள்ளலாம்.

சிறிதளவேனும் பேசிப் பொழுது கழிக்காதவர் தமது மனதில் பல ஆசைகளையோ கவலைகளையோ அடக்கி வைத்திருப்பார்கள் என்பது திண்ணம். இப்பழக்கத்தைத் தொடர்ந்து அனுஷ்டிப்பவர்களின் உள்ளம் புண்பட்டுப் போய்விடும்.

அப்படியென்றால் தீமையற்ற முறையில் பேசிப் பொழுது போக்குவது எவ்வாறு?

### தீங்கற்ற பேச்சு

டேவிட் என்பவரும் ஜரீன் லெஸ்டர் என்பவரும், பிறரைப் பற்றித் தீங்கற்ற பேச்சுப் பேசுவதையே சரியான முறையில் பேசிப் பொழுது போக்குவதாகும் என்கிறார்கள். ஆண்களின் பொழுது போக்குப் பேச்சுக்களையும் பெண்களின் பொழுது போக்குப் பேச்சுக்களையும் இவர்கள் அவதானித்து வந்தார்கள். பொதுசன நிலையங்களில் சென்று இவ்வாறு அவதானித்தார்கள். பல தரப்பட்ட மக்களையும் கூர்ந்து நோக்கிய பின் ஆண்கள் அனைவரும் பெரும்பாலும் ஒரே வகையான பொருள்கள் பற்றியே பேசிப் பொழுது போக்குகிறார்கள் என்பதைக் கண்டார்கள். பெண்களும் ஒரே விஷயங்கள் பற்றியே பேசுவதை அவதானித்தனர்.

உதாரணமாக ஆண்கள் அனைவரில், தமது முதலாளிகள் பற்றிப் பேசும் வழக்கம் இருந்தது. இதுபற்றிப் பேசி முடிந்ததும் அவர்கள் தமது நண்பர்கள் பற்றிப் பேசுவர். அப்புறம் அவர்கள் எவ்வாறு தொழில் செய்வர் என்று எல்லாம் விமர்சனம் செய்வர். இன்னுமொரு சுவாரஸ்யமான மற்றொரு விஷயம் என்ன தெரியுமா? மற்றைய மனிதனின் பணமும் அவர்கள் எவ்வாறு சம்பாதித்தார்கள் என்பதுமே அது. கடைசியாகத் தான் பெண்கள் பற்றிப் பேசுவார்கள். பேசுவதற்கு விஷயம் இல்லாத சமயங்களில் பெண்கள் பற்றிப் பேச்சு எழும். 15--20 வயதுக்கிடைப்பட்ட ஆண்பிள்ளைகளும் இளம் வாலிபர்களுமே பெண்கள்பற்றிப் பேசுவார்கள்.

### பெண்களின் அக்கறை

ஆனல் பெண்களின் பேச்சு பெரும்பாலும் ஆண்கள் பற்றியே இருக்கும். இதற்குக் காரணமும் உண்டு. காசு, பணம், வீட்டு விவகாரங்களில் தான் பெண்களுக்கு அதிகம் அக்கறை. ஆகையால் இவை பற்றியும் பெண்கள் அதிகம் பேசிக் கொள்வார்கள். தமது தோற்றத்தைப் பற்றியும் வீட்டு நிர்வாகம் பற்றியும் பெண்கள் பேசிக் கொள்வார்கள்.

ஆண்கள் பெண்களிலும் 30 சதவீதம் அதிகமாக வீண் வார்த்தை பேசிப் பொழுது கழிக்கிறார்கள் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

ஒருவருக்கு அவசரமான பிரச்சினையென்றோ மனக் கஷ்டமொன்றோ ஏற்படும் போதுதான் அவர் அதிகமாக வீண்வார்த்தை பேசுவார். இந்த உண்மையை உளநூலாராய்ச்சியாளர் மேலும் விளக்குகிறார்கள். அதாவது, பிரச்சினை ஏதேனும் ஒன்று ஏற்படும்போதுதான் மக்கள் மற்றவர்களது பிரச்சினைகளைப் பற்றி அறிய ஆர்வம் கொள்ளுகிறார்கள். பிறரது பிரச்சினைகளுடன் தமது பிரச்சினைகளை ஒப்பிட்டுப் பார்க்க அவர்கள் ஆர்வமடைவர். இந்த ஆர்வத்தின் விளைவாக வீண்வார்த்தை பேசுவர். வீட்டுக்கும் பொருள் தேட வேண்டியது ஆண்களே என்று இன்னும் கருதப்படுகிறது. ஆகையால் பணக் கஷ்டங்கள் ஏற்படும் ஆண்களே பெண்களிலும் பார்க்க அதிகமாக வம்பளக்கின்றனர் என்பது புலனாகிறது.

ஆமாம் நண்பர்களே! பெண்கள்தான் அதிகம் வீண்வார்த்தை வளர்ப்பர் என்று நாம் கருதுவோம். ஆனல் ஆண்களாகிய நாம்தான் அவர்களிலும் பார்க்கவீண்வார்த்தைகள் அதிகம் பேசிக் கொள்கிறோம். ஆனல் ஒன்று! தக்க காரணத்தோடுதான் அவ்வாறு செய்கிறோம். ஆகையால் இதுபற்றி மனம் தளர்ச்சியடைய வேண்டியதில்லை. இந்த உண்மையை நாம் ஏற்றுக் கொண்டால் அதுவே பரந்த மனப்பான்மைக்கு அடையாளமாகுமல்லவா?

---

## பெற்றோர் பிள்ளைகளை சமுகசேவையில் ஈடுபடுத்த வேண்டும்

புங்குடுதீவு, வியாழன்

"பொது ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்கு பொது மக்களின் ஆதரவே இன்றியமையாதது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைச் சமுக சேவையில் ஈடுபடத் தூண்ட வேண்டியது அவசியம்" இவ்வாறு புங்குடுதீவு அர்ச். பிரான்சீஸ் சவேரியார் சனசமுக நிலைய விளையாட்டுக் கழகத்தின் ஆண்டு விழாவில் தலைமை வகித்துப் பேசிய கிராமச் சங்கத் தலைவர் திரு. எஸ். சபாரத்தினம் கூறினர்.

கழகத் தலைவர் திரு. வி. தியோனிஸ் வரவேற்புரை நிகழ்த்தினர். செயலாளர் திரு. ஏ. மனுவேல்பிள்ளை நன்றி கூறினர்.

ஈற்றில் இக்கழகத்தினரால் "உயிர் காத்த உத்தமன்" என்ற நாடகமும் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

---

# புதுமைப் பெண்கள் கடமை என்ன?

— சரஸா சரவணமுத்து —

நமது நாடு முன்னேறி வரும் இக் காலத்தில் இளம் விதவைகட்கு வாழ்வழிக்காது விட்டு வைப்பது மிகவும் பாவமாகும். சில பெண்கள் கணவன் இறந்ததும் தங்கள் வாழ்வைப் பாலைவனமாக்கி ஆலயம் சென்று ஆண்டவனை வேண்டுவதில் காலம் கழிக்கிறார்கள். ஆ ல் பணம்படைத்தோர் பண்பாடுகளுக்குக் கூற வேண்டியதேயில்லை. வறுமையில் வாடும் சகோதரிகள் கூலி வேலை செய்யப் போகுமிடங்களில் அவர்கள் படும் இன்னல்கள் அளப்பில. கேவலம், வயிறு வளர்ப்பதற்காக அவர்கள் பெறும் வசைமொழிகள் கொஞ்சமல்ல. இவர்களில் சிலர் தங்களால் தனித்து வாழமுடியுமென்பர். அதே சமயம் வாழத்துடிக்கும் சகோதரிகளும் இருக்கத்தான் செய்கின்றனர். இவர்களுக்கு வழி வகுக்கத் தவறுவதனல் தான் குப்பைமேட்டில் மாணிக்கங்களாக மறைந்து கிடக்கின்றனர். அனதை விடுதிகளில் ஆயுட்கால உறுப்பினர்களாகின்றனர்.

அதுமட்டுமல்ல, நமது பெண் சமுகமே ஒருவரையொருவர் வாழவிடுவதிலலை. பெண்களாகிய நாம் மற்றவர்கள் கஷ்டங்களை மனிதிணரக் கூடிய சக்தியை வலுப்படுத்த வேண்டும். இன்றைய பகுத்தறிவுலகில் பெண்களாகிய நாம் வெறும் கிணற்றுத் தவளைகளாக மட்டும் இருந்துவிடலாகாது. குழந்தைகளையும் கணவனையும் பேணுவது மட்டும் தன் கடமைகளாகக் கொள்ளப் படாது. வெளியுலக அறிவும் பெற்றிருக்க வேண்டும்.

படித்த பெண்கள் சிலர் இன்று சமுகசேவைகளில் ஈடுபடுவது உண்மைதான். ஆனல் இவர்கள் அன்பின் முதிர்ச்சியோடு கூடிய சமுகசேவையில் ஈடுபட்டிருக்கிறார்களோ என்பதுதான் முக்கியமானது. தமது பெயர்கள் பலரிடையே அடிபடவேண்டும்; பத்திரிகையில் இடம் பெற வேண்டும் என்ற நோக்கம் கடுகளவுமின்றிச் சமுகசேவை செய்ய வேண்டும். முதல் எமது குடும்பங்களில்உள்ளன்போடு பணி செய்வதே சிறந்த சேவையாகும். எதையும் காலமறிந்து பெயருக்காகவும் புகழுக்காகவும் செய்யாது, அவ்வப்போது செய்ய வேண்டும். கவலையுள்ளவனுக்குக் கவலையுடன் ஆறுதல் கூறியும், மகிழ்ச்சியுள்ளவர்களிடம் மகிழ்ச்சியாகவும் தகுந்தபடி பழக வேண்டும்

மேலும் பெண்களாகிய நாம் அநாகரிகச் செயல்களில் ஈடுபடாது கண்ணியம் மிக்க தமிழ்ப் பண்பாட்டு வழி நடந்து, அப்பண்பிலேயே எமது குழந்தைகளையும் வளர்க்க முற்பட வேண்டும். நான் கலாசாலையில் கல்வி பயிலும் சமயம் எங்கள் விரிவுரையாளர் கூறுவது ஞாபகத்துக்கு வருகிறது. "ஒழுங்காகச் சேலை கட்டிக் கொள்ள வேண்டும், முன்தானையை நீளமாக விட வேண்டும்" என்று பல அரிய மொழிகளை எங்களுக்கு எடுத்துரைப்பார். நாமெல்லோரும் உடையலங்காரங்களில் எமது பண்பாட்டுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

இன்று பெண்களை அடிமைப் படுத்தி வைத்திருப்பவற்றுள் நகைப் பைத்தியமும் ஒன்று. அடுத்த வீட்டுப் பெண்கள் நாகரிக உடைகளோ, நகைகளோ போட்டுக்கொண்டாளென்றால் நாமும் போட்டுக் கொள்ள வேண்டுமெனப் பெண் மனம் விரும்புகிறது. இப்படி அற்ப ஆசைகளுக்கெல்லாம் பெண்கள் இடம் கொடுக்கக் கூடாது.

ஒரு பெண் நகைகளிலும் உடைகளிலும் ஆசையுடையவளாக இருக்கின்றாள். அவளுடைய கணவனே போதியவருவாய்அற்றவனுய் இருக்கின்றான் கணவனல் மனைவியின் ஆசைகளைப் பூர்த்தி செய்ய முடியாமற் போவதும் அதனல் குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையில் பூசல்கள் கிளம்புவதையும் நாம் காண்கின்றோம். இந்த நிலைமை ஏற்படப் பெண்கள் இடம் அளிக்கக்கூடாது

ஆகவே இவ்வித வழக்கங்களில் நாம் அதிக அக்கறை கொள்ளக் கூடாது. வாழ்வில் நாளுக்கு நாள் நாம் மெய்யறிவு பெறவேண்டும். பெண் சமுகம் உண்மையான தத்துவத்தை உணர்ந்துவிட்டால் உலகமே உய்த்துவிடும். திருநாவுக்கரசர் கொள்கைமாறிப் போகும்போது, திலகவதியார் தமது தூய வாழ்க்கையில் தமது தம்பியின் மனத்தையே மாற்றியிருக்கிறார் என அறிகிறோம். ஆகையால் பெண்கள் 'பெண்மை' என்ற அரும்பதத்துக்கு மாசுண்டாக்காதபடி சகல துறைகளிலும் முன்னேறி, பெண்ணுலகம் பெருமையுடன் விளங்க அரும்பணி புரிவோமாக.

குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற

குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார்

மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ,

குருதெனியா.

# இலங்கை வரும் ரஷ்ய வானவெளி வீரர் ககாரின்
## சுற்றுப் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்ய விசேஷ குழு

கொழும்பு, வியாழன்

கல்வி மந்திரியின் விசேஷ அழைப்பின்மீது சோவியத் வானவெளி வீரர் ககாரின் இம் மாதக் கடைசியில் இலங்கை வருகிறுர். அக்டோபர் 31-ம் திகதியும, நவம்பர் 1-ம் திகதியும் அவர் இங்கு தங்குவார். கிராமப்பகுதிகளுக்கும் அவர் விஜயம் செய்து மக்களைச் சந்திப்பார். இலங்கையில் அவரது சுற்றுப்பிரயாணம் பற்றி ஏற்பாடு செய்ய ஒரு விசேஷ குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர் விஜயம் செய்யும் பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவ மாணவிகள் அவரைச் சந்திக்கும்பொருட்டு அன்றையதினம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படும்.

### பிரதமமந்திரிக்கு குர்ஆன் மொழிபெயர்ப்பு

கொழும்பு, வியாழன்

குர்ஆனின் முதலாவது சிங்கள மொழிபெயர்ப்புப் பிரசுரம், இன்று பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநயக்காவுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. அச்சமயம் சர் ராஸிக்பரீத், ஜனுப் மாக்கான்மாக்கார் ஆகியோர் உட்பட பலபிரமுகர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

### 10,000 பேர் வேலைநிறுத்தம்

புதுடில்லி, அக். 5

கல்கத்தாவில் 10,000 டிராம்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

### "நாட்டைப் பிரிவினை செய்ய விடமாட்டேன்" —நேரு

மதுரை, அக். 5

நாட்டை மொழி அடிப்படையில் பிரிவினைசெய்வது இனி முடியாதென்றும், உள்நாட்டுப்போர் மூழ்வதாயிருந்தாலும்கூட இதுசம்பந்தமாக விட்டுக்கொடுக்கத் தயாராய் இல்லை என்றும் பிரதமர் நேரு அறிவித்தார்.

### ஆசிய புகையிரத போக்குவரத்து மகாநாடு

கொழும்பு, வியாழன்

இந்தியாவில் வருகிற நவம்பர்மாதம் நடைபெறவிருக்கும் ஆசியப் புகையிரதப் போக்குவரத்து மகாநாட்டில் இலங்கையும் கலந்துகொள்ளும். மத்திய கிழக்கு நாடுகளும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளும்.

### கட்சிமீது தடை இருக்கும்

கொழும்பு, வியாழன்

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விடுவிக்கப்பட்டபோதிலும், சமஷ்டிக் கட்சி மீதான தடை தொடர்ந்து நீடித்திருக்கும். சத்தியாக்கிரகத்துக்குக் காரணமாயிருந்த மொழிப்பிரச்சினை, இதர பிரச்சினைகள் ஆகியன பற்றி இப்போது தமிழரசுத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடைபெற மாட்டாதென உயர்தர அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

### அதிபரின் பாராட்டு

அநுராதபுரம், வியாழன்

சத்தியாக்கிரகத்தின் போது யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராயிருந்தவரும், தற்போது அநுராதபுரத்தில் அரசாங்க அதிபராயிருப்பவருமான திரு. நிஸங்கா விஜயரத்ன யாழ்ப்பாணம் திரும்பிய தமிழரசு எம். பி. க்களை அநுராதபுரம் ரயில்வே நிலையத்தில் சந்தித்துத் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

### கீரிமலையில் இன்று முதல் அந்தர் யோகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்க ஆதரவில் இன்று மாலை 5 மணி முதல் கீரிமலை சிருப்பர் மடத்தில், யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தர் தலைமையில் அந்தர் யோகம் ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை இரவுடன் முடிவடைகின்றது. சுவாமி சுப்பிரமண்யானந்தாவின் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும்.

இந்த இரண்டு நாட்களிலும் சத்சங்கம், தெய்வ சிந்தனை, யோகாசனம் இவைகளில் ஈடுபடவும், மனதை உள் முகப்படுத்தி, தெய்வீக வாழ்வில் பயிற்சி பெறவுமே இதற்கு ஒழுங்கு செய்துள்ளதாகவும், பெரியவர்களுக்கு ரூ. 5ம், மாணவருக்கு ரூ. 2ம் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அறவிக்கப்படுகிறது.

### சுதேச மருந்து தயாரிப்பு சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருக்க வேண்டும் என்ற மேற்கோளுக்கிணங்க வருங்கால வைத்தியர்கள் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்" என்று யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேதக் கலாசாலையில் நேற்று நடந்த சுதேச மருந்துகள் தயாரிப்புச் சங்கத்தில் பேசிய கலாசாலை அதிபர் டாக்டர் எஸ். ஏ. இராசையா குறிப்பிட்டார்.

"எமது நாட்டில் நாமே மருந்துகளைத் தயாரித்தால் நாட்டின் சூழ்நிலை, தட்பவெட்பம், தொழில் உடல் அமைப்பு, உணவு வேறுபாடுகட்குத் தக்க வகையிலேயே தயாரித்துக் கொள்ளலாம்.

இதனுல் நமது மருந்தில் நம்பிக்கை ஏற்படுவது மட்டுமன்றி மலிந்த விலையிலும் கிடைக்கமுடியும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

பின்பு நடந்த மருந்துகள் தயாரிப்புச் சங்க உத்தியோகத்தர் தெரிவில் தலைவராக டாக்டர் எஸ். ஏ. இராசையாவும் இணைக்காரியதரிசிகளாக செல்வன் கே. விஸ்வலிங்கம், எம். தேவமதுரம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டார்கள். பொருளாளராக டாக்டர் ஏ. வி. இராசரத்தினம், செல்வன் எஸ். குணரத்தினம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

### கிருஷ்ணமேனன்

நியுயோர்க், அக். 5

"ஐ. நா. தலைமைக் காரியதரிசி பதவி சம்பந்தமாக ரஷ்யா கூறியுள்ள யோசனையை பாரதம் எதிர்க்கிறது" என திரு கிருஷ்ணமேனன் பொதுச்சபையில் அறிவித்தார்.

### கூட்டு வழிபாட்டு சபை
#### ஆண்டு நிறைவு விழா

சுன்ஞகம், வியாழன்

சுன்ஞகம் மயிலணி சிவன் கோவிலில் கூட்டு வழிபாட்டுச் சபையின் ஆண்டுவிழா சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் தலைமையில் மேற்படி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. பெருந்திரளானவர்கள் அங்கு பிரசன்னமாயிருந்தனர்.

மேற்படி வழிபாட்டுச் சபையினுல் நடாத்தப்பெற்ற தேவாரப் போட்டிகளிலும் சிவபுராணப் போட்டிகளிலும் பரிசுபெற்ற கீழ்க்காணும்மாணவர்களுக்குத் தலைவரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

தேவாரப் போட்டி

கீழ்ப்பிரிவு. ந. வேதவல்லி, சி. சுகாசினி, க. ஜெகநாயகி

மத்தியபிரிவு: சு. தேவராணி, க. தர்மநாயகி, போ. ஜெயதேவி.

மேற்பிரிவு: சி. இமயகாந்தன், சி. பத்மாவதியம்மா, த. பாக்கியலட்சுமி.

சிவபுராணப் போட்டியின் பெறுபேறு:

முதலாவது: சு. தேவராணி, இரண்டாவது:சி. இமயகாந்தன். மூன்ருவது:க.சிவஞானம். வழிபாட்டுச் சபையின் வளர்ச்சி பற்றியும் சமயவாழ்க்கை பற்றியும் திரு.மா.குமாரசுவாமி உரை நிகழ்த்தியபின் திரு. கு. அபலவாணரின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது.

தலைவர் பேசுகையில், நாம் எல்லோரும் தெய்வநம்பிக்கையுடையோராய் இறை வழிபாடு திரிகரண சுத்தியுடன் செய்வோமாகில் ஐயமின்றி நாம் அதற்குரிய நற்பலனை வேண்டியவாறு பெறுவோமென்றும், எதிர்கால சமுகம் சிறந்ததாக இருக்கவேண்டின் பெற்ருர் பிள்ளைகளை இப்பேர்ப்பட்ட கூட்டுவழிபாடுகளில் இடைவிடாது பங்குபற்றச் செய்ய வேண்டுமெனவும் பிள்ளைகள் விவேகிகளாயும் கல்வியிற் தேர்ச்சியுடையவர்களாயும்வரவேண்டுமாகில் கூடியளவு மனன பாடங்களிற் சிரத்தையெடுக்கப் பெற்ருர்செய்ய வேண்டுமெனத் தெரிவித்தார்

### இ. போ. ச. பரிசுத் திட்டம்

மகாரகம, புதன்

தேசிய மயமாக்கப்பட்ட பஸ் சேவையின் அபிவிருத்திக்கு யோசனை கூறும் அதன் ஊழியர்களுக்கு சன்மானம் வழங்கும் ஒரு திட்டத்தை இலங்கை போக்குவரத்துச் சபை தயாரித்துள்ளது.

ஊழியர்கள் தெரிவிக்கும் யோசனை அமுல் நடத்துவதற்குத் தகுதியானதென ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான் சன்மானம் வழங்கப்படும்.

இத் திட்டத்தின் கீழ் என்ஜினியரிங் பிரிவைச் சேர்ந்த எட்டு ஊழியர்கள் மொத்தம் 450 ரூபாய் சன்மானம் பெற்றுள்ளனர்.

### வெள்ளத்தினுல் பெரும் சேதம்

தங்காலை, புதன்

சமீபத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த கடும்மழை காரணமாக பெருந்தொகையான நெல்வயல்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வளவை ஆற்றின் இருமருங்கிலும் உள்ள சுமார் பதினுயிரம் ஏக்கர் வயலில் உள்ள நெற்பயிர் வெள்ளத்தினுல் பெரும் சேதமடைந்துள்ளன.

இந்த நஷ்டம்பற்றி விவசாயிகளின் தூதுகோஷ்டியொன்று அரசாங்க அதிபரைச் சந்தித்து முறையிட்டுக் கொண்டது.

### தீர்மானத்தை தள்ளுபடி செய்ய மேயருக்கு மகஜர்
#### 12 அங்கத்தினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் நகரசபையில் சென்றமாதம் 11-ம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தள்ளுபடி செய்யுமாறு கோரி குவாசி எம். எம். சுல்தான் உட்பட 12 நகரசபை அங்கத்தவர்கள் மேயருக்கு ஒரு மகஜரைச் சமர்ப்பித்திருந்தனர். இதனை ஆலோசிப்பதற்காக மாநகரசபையின் விசேஷ கூட்டமொன்றை மேயர் இம் மாதம் 9-ம் திகதி கூட்டியுள்ளார்.

11—8—61-ல் குவாசி எம். எம். சுல்தானும் மற்றும் ஹாஜி வா. மூ. மூ. அபுசாலிஹ், திருவாளர்கள். சோ. இராசரத்தினம், நா. த. செல்லத்துரை, நா. தேவபாலசுந்தரம், ஆ. துரைராஜசிங்கம்,அ.நடராஜா, யே. சூ. அழகையா, ம. யேக்கப், அ. யோ. இராஜசூரியர், பீ. ச. சோமசுந்தரம் ஆகிய மாநகரசபை அங்கத்தவர்கள் அந்த மகஜரில் கையொப்பமிட்டுள்ளனர்.

முன்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

1. எல்லா இறைச்சிக்கடைகளையும் 2 வருடங்களுக்கு மட்டுமே டெண்டரில் விடுவது. இதற்காக 1962-ம், 1963-ம் ஆண்டுகளுக்கான டெண்டர்களைக்கோருவது

(இதை திரு. ஏ. துரைராஜசிங்கம் எதிர்த்து தாம் எதிராக வாக்களிப்பதாகக் கூறினுர்.)

2. வெட்டப்படும் இடத்திலிருந்து இறைச்சிக்கடைக்கு எடுத்துச் செல்லப்படும்போது இறைச்சி எடுத்துச் செல்லப்படும் பெட்டியின் உள்பக்கம் துத்தநாகத்திஞல் செய்யப்பட்டுள்ளதாக இருக்கவேண்டும். ஒருபோதும் இறைச்சி மூடாது எடுத்துச்செல்லக்கூடாது.

3. ஒரு இறைச்சிக்கடைக்கு என எடுத்துச் செல்லப்படும் இறைச்சிப்பெட்டி மற்றக் கடைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மூடாது வைக்கக் கூடாது.

4. 1962-ம், 1963-ம் ஆண்டுகளுக்கான ஒப்பந்தமொன்றை இறைச்சிக்கடைக்காரர்கள் செய்துகொள்ளவேண்டும். 2-ம், 3-ம் விதிகளில் தரப்பட்டுள்ளவற்றை அனுசரித்ததாகவே இது இருக்கும்.


மகத்தான 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனேஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை6-30 க்கும் இரவு 9-30 க்கும்

ராஜகபூர் - நார்கீஸ் நடித்த
சோரி சோரி (ஹிந்தி)

Monday to Thursday 2-nd to 5-tn 4-30 p. m.

ONE FOOT IN HELL


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலைவீதி '63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.